[Sri K. R. Viswanathan] [16th November 1957

I beg to submit also the Eighth Report on the action taken by the Government on the Recommendations of the Committee contained in the Report on the Cinchona Department.

(3) REPORT OF THE COMMITTEE OF ASSURANCES.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தினுடைய உறுதி மொழிகளைப்பற்றிய ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கையை[a] தங்களுடைய அனுமதியின் பேரில் இந்த சட்ட மன்றத்திற்கு முன்னால் நான் சமர்ப்பிக்கிறேன்.

VII.—GOVERNMENT BILL.

THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1957[b].

Mr. SPEAKER : அடுத்தபடியாக அரசாங்க மசோதாக்கள். கனம் நிதி அமைச்சர் அவர்கள் "அப்ரோபிரியேஷன் பில்லைப்" பிரேரேபித்துப் பேசுவார்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, 1957-ம் வருஷத்திய சென்னை நிதி ஒதுக்கல் (மூன்றாவது) மசோதாவை இந்தச் சபை முன்பு சமர்ப்பித்து, மேற்படி மசோதாவை உடனே ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பிரேரேபிக்கிறேன். இந்த சமயத்தில் நான் பேசவேண்டியது ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன். அங்கத்தினர்கள் விவாதத்தின் போது ஏதாவது பதில் சொல்ல வேண்டிய பிரச்னைகளை எழுப்பினால், அதற்கான பதிலை என்னுடைய முடிவுரையிலே நான் சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகையினால் உடனே இந்த மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பிரேரேபித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : Motion moved—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1957, be taken into consideration at once."

Sri M. D. RAMASWAMI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த "அப்ரோபிரியேஷன் பில்லின்" மீது என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும்பொழுது, தொழில்கள் விஷயமாக என்னுடைய தொகுதியைப் பற்றி சில குறைகளை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அறுப்புக்கோட்டை, முதுகளத்தூர் பகுதியில் பெரிய அளவில் தொழிற்சாலை எதுவும் கிடையாது. அங்குள்ள மக்கள் மிகவும் பிற்போக்கானவர்கள் என்பதை ஏற்கனவே இந்த சபை ஒப்புக்கொண்டிருக்கிறது. அதற்காக பல கைத்தொழிற்சாலைகள் அங்கே ஆரம்பிப்பதாக உறுதிமொழியும் கொடுத்திருக்கிறார்கள். முக்கியமாக இந்தப் பிரதேசத்திலே பருத்தி ஏராளமாக விளைகிறது. அறுப்புக்கோட்டையில் குறைந்தது 7,000 கைத்தறிகள் இருக்கின்றன. அதற்கு அங்கு முக்கியமாக ஒரு நூல் நூற்பு ஆலை ஏற்படுத்துவது அவசியம். கூட்டுறவு முறையில் அறுப்புக்கோட்டையில் ஒரு ஆலை ஏற்படுத்த முயற்சிப்பதாக கூட்டுறவு இலாகா உயர்தர அதிகாரிகள் வாக்களித்திருந்தார்கள். ஆனால், என்ன காரணத்தினாலோ, அந்த ஆலை ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு மாற்றப்பட்டு விட்டது. அறுப்புக்கோட்டை, முதுகளத்தூர் பிராந்தியத்தில் இத்தகைய ஒரு நூல் நூற்பு ஆலை ஏற்படுத்துவதன் மூலம் நல்ல உதவி செய்ய முடியும். அங்கு ஏராளமாக பருத்தி விளைகிறது, நெசவும் பெருத்த அளவுக்கு நடக்கிறது. இனிமேலாவது சர்க்கார் இந்த யோசனையை எடுத்துக்கொண்டு அமுல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

[a] Printed separately and circulated to Hon. Members.

[b] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 15th November 1957.

16th November 1957] [Sri M. D. Ramaswami]

அடுத்தபடியாக, சர்க்கார் தரப்பிலே வெளியிடப்பட்ட மிகவும் பிற்போக்கான வகுப்பினர் ஜாபிதாவிலே, இப்பொழுது சேர்த்திருக்கக்கூடிய வகுப்பினரைக் காட்டிலும் இன்னும் அதிக பிற்போக்கு நிலையில் இருக்கக் கூடிய வகுப்பினர்களேயும் சேர்க்கவேண்டிய நிலைமை இருக்கிறது. குறிப்பாக முக்குலத்துவரை சேர்க்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. அது போலவே, இந்த நாட்டிலே கல்வித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறவர்கள் என்று கருதப்படவேண்டியவர்கள் நெசவுத் தொழிலை செய்யும் எல்லா சமூகத்தினரும் அவர்களுடைய நிலைமையைப் பற்றி எற்கனவே சர்க்காருக்குத் தெரியும். அவர்களுடைய நிலையை அபிவிருத்தி செய்வதற்காக சில காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு சில ஒத்தாசைகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் அவைகள் போதாது. பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் அவர்கள் உயர்வு அடைவதற்கு இன்னும் அதிகமான வசதி செய்து கொடுக்கவேண்டும். அந்த நோக்கத்தோடுதான் கைத்தறி நெசவு செய்யும் எல்லா வகுப்பினரையும் மிகவும் பிற்போக்கான வகுப்பினர் ஜாபிதாவிலே சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது குறித்து கைத்தறி நெசவாளர்கள் சர்க்காருக்கு விண்ணப்பங்களேயும், தீர்மானங்களேயும் அனுப்பியிருக்கிருர்கள். அதையும் சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மூன்ருவதாக, கைத்தறி நெசவு கூட்டுறவு ஸ்தாபனங்களில் வேலை செய்யக்கூடிய மக்களுக்கு மட்டும் உதவி செய்யும் நோக்கத்தோடு இந்த ரிபேட் கொடுக்கப்பட்டு வருகிறது. முன்பு கைத்தறி நெசவு செய்யும் எல்லா மக்களுக்கு உபயோகப்படும் முறையில் இந்த ரிபேட் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனல் சமீப காலத்தில் அந்த முறை மாற்றப்பட்டு விட்டதால், கைத்தறி நெசவு கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டும்தான் இந்த ரிபேட்டினுல் அனுகூலம் ஏற்படுகிறது. (உதவி சபாநாயகர் இந்த சமயத்தில் தலைமை வகித்தார்). இப்பொழுது அதுவும் போய் இந்த ரிபேட்டை ரூபாய்க்கு $1\frac{1}{2}$ அணுவாக இருந்ததை 1 அணுவாக குறைத்து விட்டதாக தகவல் வந்திருக்கிறது. இம்மாதிரி குறைப்பது கைத்தறி நெசவு கூட்டுறவு ஸ்தாபனங்களை மிகவும் பாதிக்கும். ஆகவே, இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு இதை உடனே தெரியப்படுத்தி ரிபேட்டை குறைக்காமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை குறிப்பாக நான் வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri P. S. ELLAPPAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஹரிஜனங்களுக்கு உதவி செய்வதற்காக ஏராளமான பணத்தை வாரி இறைக்கிருேம், அவர்களுக்கு இவ்வளவுதான் செய்கிருேம் என்பதற்கு கணக்கே கிடையாது, அவர்களுக்காக ஏராளமான பணத்தை ஒதுக்கியிருக்கிருேம் என்று எல்லோரும் சொல்லுகிருர்கள். இது எப்படி இருக்கிறது என்ருல், கண்ணுல் கண்டது கோடி, காணுதது அநேகம் கோடி என்பது போலத்தான் இருக்கிறது. எங்கேயோ ஒரு இடத்தில் கொஞ்சம் சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. பெருவாரியான மக்கள் பயிரிடுவதற்கு வசதி இல்லாமல் தவிக்கிருர்கள். சர்க்கார் இடத்தில் ஏராளமான புறம்போக்கு நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அந்த நிலங்களை அவர்களுக்கு கொடுத்தால் ஒரு சாண் இடம்கூட பாழாகப் போகாமல் விவசாயத்தை மக்கள் அபிவிருத்தி செய்வார்கள். ஜமீன் ஒழிப்பினுல் எல்லா நிலங்களும் தங்களுக்கு கிடைக்கப்போகிறது என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தார்கள். ஜமீன் ஒழிப்பு வந்தது ஹரிஜனங்களுக்கு பெரிய ஹிம்சை ஆகிவிட்டது. ஜமீன் ஒழிப்பு வந்தவுடனே எல்லா நிலங்களிலும் சவுக்கு போட்டுவிட்டார்கள். முன்பு குத்தகைக்கு விடப்பட்ட நிலங்கள்கூட போய்விடுகிறது. முச்சலிக்கா எழுதிக்கொடு என்று கேட்கிருர்கள். முச்சலிக்கா எழுதிக்கொடுத்தால் நிலமே விவசாயிகளுக்கு சொந்தமாகிவிடுமோ என்று பயந்து நிலச்சொந்தக்காரர்கள் எழுதிக்கொடுக்க மறுக்கிருர்கள். இம்மாதிரி நிலைமையினுலே ஹரிஜனங்கள் மிகுந்த துன்பத்தை அடைந்திருக்கிருர்கள்.

[Sri P. S. Ellappan] [16th November 1957

அதோடுகூட, மனைக்கட்டுகள் விஷயமாக அந்தக் கம்பத்தில் கட்டி விட்டார்கள், இந்தக் கம்பத்தில் கட்டி விட்டார்கள் என்று சொல்லி அப் புறப்படுத்தச் சொல்லுகிறார்கள். இது சம்பந்தமாக அநேக மனுக்கள் தாசில்தாரிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தாசில்தார் " செட்டில் மெண்டு முடிவாகட்டும், அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம். ஏதாவது ஜரூராக தொந்தரவு செய்தால், அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம் " என்று சொல்லி விடுகிறார். ஆகவே ஹரிஜன முன்னேற்றத்தை கவ னித்து, பொதுவாக நிலம் இல்லாத ஏழை விவசாயிகள் அத்தனை பேருக் கும் சர்க்கார் புறம்போக்கு நிலங்களை பிரித்துக் கொடுத்தால், விவ சாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும், அவர்கள் முன்னேற்றம் அடை வதற்கும் உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, செய்யாரில் நான் ஒரு ஹாஸ்டல் வைத்து நடத்து கிறேன். அதில் 60 பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒரு வருஷத்தில் 70 பேர் கள் மனு போடுகிறார்கள். நான் அதில் 10 பேர்களைத்தான் எடுத்து கிராண்டு கேட்டேன். சர்க்கார் அதில் 3 பேர்களுக்குத்தான் கிராண்டு கொடுக்கிறார்கள். இப்படிச் செய்தால் எப்படி அந்த ஹாஸ்டல் நிர் வாகத்தை நடத்துவது ? டைரக்டரைக் கேட்டால் " நான் என்ன செய் வது, சட்டியில் இருந்தால்தானே ஆப்பையில் வரும், தமிழ் நாடு பூராவுக்கும் என் கையில் கொடுத்திருக்கிற தொகையைத்தானே பிரித்துக் கொடுக்கவேண்டும் " என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இப்படி எழு பது பேர்கள் வரும்போது நாங்கள் பத்துபேருக்கு உதவி செய்ய வேண்டு மென்று கேட்டால் நான்கு பேர்களுக்கு சர்க்கார் உதவி செய்கிறார்கள். இதனால் அங்குள்ளவர்கள் எங்களை மிளகாய் அரைக்கிறார்கள். " பாவிப் பயன்கள், பணத்தை வாங்கிச் சாப்பிட்டு விடுகிறான் " என என்னைத் திட்டுகிறார்கள். என்னை மாத்திரம் இல்லை. எல்லோருக்கும்தான் திட்டு விழுகிறது. ஆகவே சர்க்கார் இன்னும் கொஞ்சம் கருணையோடு அதிகத் தொகை ஒதுக்கி எல்லாருக்கும் கிட்டத்தட்ட உதவி செய்ய வேண்டுமென்ப தாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அந்தச் சமூகம் முன்னுக்கு வரமுடியும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

Sri K. R. VISWANATHAN : கனம் உதவி அவைத்தலைவர் அவர் களே, ஒட்டுமொத்தமாக நிதி ஒதுக்குகின்ற இந்த மசோதாவின் மீது ஒரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஹரிஜன நல இலாகாவில் ஒரு புதுக் கொள்கையை வகுத்து, அதை அனுசரித்து தனியார் நடத்துகின்ற மாணவர் உணவு விடுதியை சர்க்காரே எடுத்து நடத்துவது எனத் தீர்மானம் செய்து இருப்பது இருபத்தைந்து விடுதிகள் இந்த ஆண்டில் சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இனியும் வரிசைக் கிரமமாக ஆண்டு தோறும் எடுத்துக்கொண்டு விடுவது எனத் திட்டமிட்டுள்ளார்கள். இதனால் சில இன்னல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அதாவது புதிதாக மாணவ உணவு விடுதியை ஏற்படுத்த யாராவது முன் வந்தால் அதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. புதிய விடுதிகளில் தங்கிப் படிக்க படிப்புதவி ஹரிஜன மாணவர்களுக்கு அளிப்பதுபோல் பிற்பட்ட வகுப்பு மாணவர்கட்கு உதவி அளிப்பதில்லை. இதுவரைக்கும் தனியார் நடத்துகின்ற உணவு விடுதியில் ஹரிஜன வகுப்பு மாணவர்களாக இருந் தாலும், பிற்பட்ட இனத்து மாணவர்களாக இருந்தாலும் உதவி செய்து வந்திருக்கிறார்கள். இதே மாதிரியாக இனியும் செய்து வந்தால்தான் ஓரளவு பிற்பட்ட சமூகத்து மாணவர்கள் முன்னுக்கு வரமுடியும்.

அடுத்தபடியாக இதுவரைக்கும் உணவு விடுதிகளில் 100 மாணவர்கள் இருந்தால் 25 பேர்களாவது பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் இருக்க வேண்டுமென்று, அவர்களுக்கு உதவி அளித்து வந்தார்கள். ஒரு ஆண்டு காலமாக என்று நினைக்கிறேன். 25 பேர்களுக்கு உதவி கொடுக்காது, 15 பேர்களுக்கு என்று குறைத்து விட்டார்கள். முற்பட்டவர்களுக்கு 10 பேர்களுக்காவது கொடுக்க வேண்டுமென்று விதி மாற்றப்பட்டு இருக்கிறது. ஆகையால் பிற்பட்ட மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவி குறைய ஆரம்பித்து இருக்கிறது. ஏராளமான பிற்பட்ட சமூகத்து மாணவர்கள் படிக்க முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இது மாதிரியாகச் செய்திருப்பது மிகவும் வருந்தவேண்டிய விஷயம்.

16th November 1957] [Sri K. R. Viswanathan]

பிற்பட்ட வகுப்பிலேயே மிகவும் பின்தங்கியவர்கள் என்று சில சமூகத் தாரைப் பிரித்து, அவர்களுக்கு ஹரிஜனங்களுக்கு அளிக்கப்படும் சலுகை களை எல்லாம் அளிக்க வேண்டுமென்று செய்திருப்பதை வரவேற்கிறேன். ஆனால் இம்மாதிரியான முடிவு பல கல்லூரிகளில் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். பல. கல்லூரிகளில் முழுச்சம்பளச் சலுகை கொடுக்கப்பட வில்லை.

அடுத்தபடியாக இந்த நாட்டில் இருக்கிற பெருவாரியான மக்கள் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்கள்தான் நாட்டின் முதுகெலும்பு. அவர்கள் படிப்பு, பொருளாதாரம் இவற்றில் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு வழி செய்ய வேண்டும். உத்தியோக விஷயத்திலும், கல்வி விஷயத்தில் அவர் களுக்கு அளிக்கப்பட்டு வரும் சலுகைகள் நீடிக்கப்பட வேண்டும். தொழில் கல்லூரிகளில் அனுமதிப்பதில் அவர்களுக்குச் சலுகை கொடுக்கவேண்டும். இந்த நாட்டின் ஜனத்தொகையில் அவர்கள் 50 பர்செண்ட் ஆவது இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய ஜன விகிதாசரத்திற்கு ஏற்றபடி கல்லூரிகளிலும், உத்தியோகங்களிலும் இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக குடிதண்ணீர் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். காலையில்கூட சங்கரன்கோயில் தாலுக்காவில் இருக்கும் குடிதண்ணீர் கஷ்டத்தைக் குறித்து ஒருவர் விதி 40-ன் கீழ் ஒரு பிரே ரணையைக் கொண்டுவந்தார். அங்கே உள்ளதுபோல அநேக இடங்களில் குடிதண்ணீர் கஷ்டம் இருந்து வருகிறது. உணவுப் பொருளின் ஒரு பகுதி யாக இருப்பது தண்ணீர். "நாஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீம்" படி ஏராள மான பணம் ஒரு அரசாங்கத்தாரால் கொடுக்கப்படுகிறது. தண்ணீர் மிகுதி யாக இருக்கிற பகுதிகளில் காலரா போன்ற வியாதிகள் பரவுவதைத் தடுப்பதற்கு பாதுகாக்கப்பட்ட நீர் வழங்குவதற்காக அந்தப் பணம் உபயோ கிக்கப்படுகிறது. அதே போல் குடிதண்ணீர் இல்லாத பகுதிகளில் நரம்புச் சிலந்தி போன்ற வியாதிகள் பரவுவதையும் தடுப்பதற்கு அந்தப் பணத்தி லிருந்து உதவி செய்ய நடு அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறி ஏற்பாடு செய்ய வேண்டும். நல்ல குடிதண்ணீர் இல்லாத இடங்களில் வசதியைச் செய்து தரவேண்டும் என்பதாகச் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

Sri N. MAHALINGAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டு வந்திருக்கும் மான்ய கோரிக்கை மீது, நிர்வாகத்தில் இருக்கக்கூடிய சில கஷ்டங்களை எடுத்துரைக்க விரும்புகிறேன். கல்வித் துறையிலே பிற்பட்ட வகுப்பினர்களின் நலனுக்காக பல சலுகைகள் சர்க் கார் அளித்து வருகிறார்கள். சுதந்திரம் அடைந்த நாளாக கல்வித்துறை யில் பிற்பட்ட வகுப்பினர்கள் முன்னேறுவதற்காக அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் சமுதாயத்தில் எந்த வகுப் பினர் இந்தச் சலுகைகளைப் பெற உண்மையான தகுதி உடையவர்கள் என் பதில் திட்டவட்டமான கொள்கை இல்லாமல் இருந்து வருகிறது. அரசாங் கம் பிற்பட்ட வகுப்பினர்கள் என்று ஒரு லிஸ்ட் தயாரித்திருக்கிறது. அந்த லிஸ்டின்படிதான் இந்தச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. சில காலத்திற்கு முன்பு மத்திய சர்க்கார் பிற்பட்ட வகுப்பினர்களைப் பற்றி அறிய ஒரு கமிஷன் அமைத்தார்கள். அது நாடெங்கிலும் சுற்றுப்பிர யாணம் செய்தது. அந்த சமயத்தில் நம்முடைய ராஜ்யத்திற்கும் வந் தார்கள். அந்த சமயத்தில் கோயம்பத்தூரில் இருக்கக்கூடிய எம்.எல்.ஏக் கள் கமிஷனிடம் சென்று கவுண்டர்களையும், நாயுடுகளையும் பிற்பட்ட வகுப் பினர்கள் லிஸ்டில் சேர்க்க வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தார் கள். சர்க்காருக்கும் அது சம்பந்தமான விண்ணப்பம் அனுப்பப்பட்டது. கவுண்டர் வகுப்பினர் கல்வித்துறையிலேயும், பொருளாதாரத் துறையிலே யும் மிகவும் பிற்பட்ட இனமாக இருக்கிறார்கள், இவர்களை பிற்பட்ட வகுப் பினர் லிஸ்டில் சேர்க்க வேண்டும் என்று ஜில்லா கலெக்டர் சிபார்சு செய்தும், அங்கிருக்கும் எல்.எல்.ஏ-க்கள் விண்ணப்பம் செய்தும், இந்த வகுப்பினரை இன்னும் சேர்க்கப்படவில்லை. அதே சமயத்தில் பிற்பட்ட

வகுப்பினரை மிகவும் பிற்பட்ட வகுப்பினர் என்று அதிகமான சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே இந்த முறை சரியானதாக இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

பிற்பட்ட வகுப்பினர் என்று எடுத்துக்கொண்டால் சென்னையிலே பல குடும்பங்களிலே பட்டதாரிகள் இல்லாத குடும்பமே இருக்க முடியாது. இந்தக் குடும்பத்தினர்களும் இந்த வசதிகளைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அப்படி இருக்க முடியுமா ? அவர்கள் பெறும் சலுகைகள் நியாயமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். இவர்கள் பொருளாதாரத்துறையிலே எவ்வளவு மோசமாக இருக்கிறார்கள் என்பதையும், கல்வித்துறையிலே எவ்வளவு பின் தங்கியிருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். பரம்பரையாக பல குடும்பங்களில் பட்டதாரிகள் இருக்கும்போது, அந்தக் குடும்பத்தினர்களுக்கு மேலும் கல்விச் சலுகைகள் அளித்துக் கொண்டிருப்பது பொருந்துமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்திய சர்க்கார் இந்த வகுப்பினர்களை ஆராய்வதற்காக ஒரு கமிஷனை ஏற்படுத்துவது போல் இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை நமது மாகாண சர்க்காரும் ஒரு கமிஷனை ஏற்படுத்தி, எந்தெந்த வகுப்பினர், கல்வித் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் மிகவும் பிற்பட்ட இனமாக இருக்கிறார்களோ அவர்களை இந்த லிஸ்டில் சேர்ப்பதற்கான முயற்சி எடுக்க வேண்டும். இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களில் வேறுபட்ட பெயர்கள் இருக்கின்றன. சாதாரணமாக நாயுடு என்ற ஜாதியினர் இருக்கின்றார்கள். அவர்களிலே வடுகா என்ற பெயர் இருக்கிறது. இதில் நாயுடு என்ற பெயர் முற்போக்கு இனத்தைச் சேருகிறது, அதே சமயத்தில் வடுகா பிற்போக்கு இனத்தில் சேருகிறது. அதே மாதிரியாக நாடார் வகுப்பு என்று சொன்னால், அது முற்போக்கு இனத்தில் சேருகிறது, ஆனால் சாணார் என்று சொன்னால் அது பிற்போக்கு வகுப்பைச் சேருகிறது. இரண்டு வகுப்பினர்களும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், பெயரில்தான் மாற்றம் இருக்கிறது. ஆகவே இது நியாயத்திற்கு விரோதமாக இருக்கிறது என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. இந்த சமூகத்தில் கிராமத்தில் இருக்கக்கூடிய மக்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கக்கூடிய மக்களுக்கு அவசியம் சலுகை கொடுக்க வேண்டும் என்று ஒத்துக்கொள்கிறார்கள். ஆகையால் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற மக்கள் எல்லோரையும் பிற்பட்ட வகுப்பினர்கள் என்று கருதப்பட வேண்டும். விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கும் கவுண்டர் வகுப்பைக்கூட இந்த பிற்போக்கு வகுப்பில் சேர்க்கவில்லை. அவர்களின் பிள்ளைகள் கல்வித்துறையில் வசதி இல்லாமல் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, பிற்பட்ட வகுப்பினர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சலுகை ஒன்றும் கொடுக்கப்படுவதில்லை. உத்தியோகத் துறையிலும் அப்படித்தான் இருக்கிறது. ஆகையால் அரசாங்கம் நல்ல முறையிலே கவனித்து யார் யாருக்கு நியாயமாக சலுகை அளிக்க வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக குடிதண்ணீர் திட்டத்தைப் பற்றி மத்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீ கர்மார்க்கர் ஒரு கூட்டத்தில் பேசும்போது கிராம குடிதண்ணீர் திட்டத்திற்காக $1\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், ஆனால் மாகாண அரசாங்கங்களில் இருந்து போதுமான திட்டங்கள் அனுப்பப்படவில்லை என்றும் ஆகவே அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். ஆகவே நமது சர்க்கார் கிராம குடிதண்ணீருக்கான திட்டத்தைத் தயாரித்து மத்திய சர்க்காருக்கு அனுப்பி நமக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான பங்கை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இங்கிருக்கும் சில பஞ்சாயத்து போர்டுகள் சேர்ந்து ஒரு குடிதண்ணீர் திட்டத்தைத் தயாரித்து சர்க்காருக்கு அனுப்பினார்கள், ஆனால் அதை நகர திட்டம் என்று அந்த இலாக்காவில் அதை கவனிக்கவில்லை. உதாரணமாக ஆனைமலை, வேட்டைகாரன்புதூர், விடையகுளம், காளியாபுரம்,

16th November 1957] [Sri N. Mahalingam]

கோட்டூர்-மலையாண்டிபட்டணம், ஆகிய பஞ்சாயததுக்கள் சேர்ந்து ஒரு பொதுத்தண்ணீர் திட்டத்தைத் தயாரித்து, அதை ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமில் சேர்க்கப்படவேண்டும் என்று சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் சர்க்கார் இது ஒரு நகர திட்டமாக இருக்கிறது. இதற்கு 20 லட்ச ரூபாய் செலவழிக்க வேண்டும் என்று திருப்பி அனுப்பி விட்டார்கள். ஆனால் அந்த பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் சேர்ந்து நிதி அமைச்சரை யும், ரெவின்யூ அமைச்சரையும், ஸ்தலஸ்தாபன அமைச்சரையும் கண்டு இது நகர திட்டம் அல்ல கிராம திட்டம் ஆகவே இந்தத் திட்டத்தை மத்திய சர்க்காருக்கு அனுப்பி பணம் கேட்க வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே கனம் நிதி அமைச்சர் அவர்கள் டில்லிக்கு போகக்கூடியகாலத்தில் மத்திய சர்க்காரிடம் இதை வற்புறுத்தி அதற்கான நிதியை பெற்று வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்வாறே கல்வித்துறையில் பிற்போக்கு வகுப்பினருக்குக் கொடுக்கப்படும் சலுகையில் மேற்சொன்ன ஏற்றத்தாழ்வுகள் இல்லாதவாறு தக்க நடவடிக்கை எடுத் துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தை களை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRIMATHI SAVITHIRI SHANMUGAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் கோவை நகரத்திலும், அதன் சுற்றுபுறங்களி லும் பலத்த மழை பெய்ததின் காரணமாக பல சேதங்கள் ஏற்பட்டிருக் கின்றன என்பது அநேகருக்குத் தெரிந்த விஷயம். கடந்த பத்து வருஷ காலமாக இப்பேர்ப்பட்ட மழை பெய்ததில்லை. துரதிருஷ்டவசமாக அங்கே அதிக மழை பெய்திருக்கிறது. மிகவும் தாழ்ந்த இடங்களில் வசிக்கக்கூடிய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு பலவித கஷ்டத்திற்குள்ளானார்கள். அங்கே குடிசையில் வாழக்கூடிய ஏழை மக்களுக்கு சொல்லொணுத்துன்பம் ஏற்பட்டது. அவர்கள் தங்குவதற்கு இடமின்றி தவித்தார்கள். ஆனால் ஜில்லா கலெக்டர் அப்படி கஷ்டத்திற்குள்ளான மக்களை அந்த இடத்தி லிருந்து வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தி அவர்களுக்கு உடனடியாக வேண்டிய நிவாரணம் அளித்தார்கள் என்பதை நாம் பார்த்தோம். தக்க சமயத்தில் அளித்த இந்த உதவிக்காக அரசாங்கத்தை நாம் போற் ருமல் இருக்கமுடியாது. இருந்தபோதிலும் தீபாவளி சமயத்தில் பலத்த மழையின் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய குடிசைகள் வீழ்ந்து விட்டன. ஆகவே கலெக்டர் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூபாய் 30 மான்யமாக வீடு கட்டிக்கொள்வதற்கு உதவினார்கள். அந்த வீடுகள் கட்டின 15 நாட்களுக்கெல்லாம் இடிந்து வீழ்ந்துவிட்டன. இதைப்பார்க்கும் போது அரசாங்கத்திற்கும் இதனால் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். 10-37 a.m.

அங்கு வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல இடம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு குடியிருப்பதற்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு ஆங்காங்கே பள்ளிகளில் இருக்க கோவை நகர சபையார் வசதி செய்துகொடுத்திருக்கிறார்கள். அந்த வசதி மட்டும் போதாது என்ற காரணத்தினால் நாங்கள் கலெக்டரை அணுகி அவர்களுக்கு போதிய வசதி செய்துகொடுக்கும்படி சொன்னதின் பேரில் கலெக்டர் ஒரு கமிட்டியை நிறுவி, மத்தியான சாப்பாட்டிற்கான வசதியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அது போதாது என்று நான் நினைக்கிறேன். மீண்டும் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது என்ன வென்றால், இந்த 30 ரூபாய் ஒரு குடிசைக்கு என்பது போதாது, இன்னும் அதிகத் தொகை கொடுத்து அதோடு உடனடியாக இந்தக் குடிசைகளை அகற்றி விட்டு நல்ல முறையில் அவர்களுக்கு வீடு வசதி செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கல்வியைப் பற்றி பலர் சொன்னார்கள். முக்கியமாக, இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு ஆசிரியர் பயிறசிக்கு செல்லவேண்டியவர்களுக்கு, நான் இந்த தேர்தல் கமிட்டியில் ஒரு அங்கத்தினராக இருந்தேன், அந்த சமயத்தில் கோவை, சேலம் ஜில்லாக்களில், ஹயர் கிரேட், செகண்டரிக் கிரேட் இவைகளுக்கு

[Srimathi Savithiri Shanmugam] [16th November 1957

120 பேர்களைத்தான் எடுக்க நம் அரசாங்கம் வசதி செய்திருந்தது. ஆனால் நீங்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் 1,500 ஆப்ளிகேஷன்ஸ் வந்திருந்தது. இது பெண்களுடையது மட்டுமாகும். 3, 4, 5 வது பாரம் பாஸானவர்கள் ஹயர் கிரேடிற்கு அப்ளை செய்யலாம் என்று விதியிருக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. பெயில் ஆனவர்களும் ஹயர் கிரேடிற்கு மனு போட்டு விடுகிறார்கள். அதனால் 3, 4, 5 பாரம் பாஸானவர்களுக்கு எந்தவித சௌகரியமும் இருப்பதில்லை என்று நான் இந்தயிடத்தில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே, 3, 4, 5 பாரம் பாஸானவர்களுக்கு உடனடியாக வேறு ஏதாவது ஒரு பயிற்சியை நம் அரசாங்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

10-42 a.m. *SRI T. IRUSAPPAN : துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் உபமான்யக் கோரிக்கைகள்மீது நான் சில கருத்துக்களை சொல்ல முன் வந்திருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படுகிற தொகை பூராவும் அவர்களுக்கு என்று செலவு செய்யப்படுகிதா என்று பார்த்தால் அது அவர்களுக்கு கிடைப்பதில்லை. பூராவும் அவர்களுக்கு கிடைப்பதில்லை. அதைக் கையாள்கிறவர்கள் அதைச் சரிவர அவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்வதில்லை. அந்தத் தொகை பூராவும் அவர்களுக்கே செலவு செய்யப்படுகிறது என்று ஏட்டளவில் இருக்கிறதேயொழிய அவர்களுக்கு அந்தத் தொகை பூராவும் செலவு செய்யப்படுவதில்லை. அது அம்மக்களுக்கு நல்ல முறையில் பயன் அளிப்பதாகயில்லை. எனது தொகுதியில் பிளாக் டெவலப்மெண்ட் ஏரியா இருக்கிறது. இந்த பிளாக் டெவலப்மெண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த விதமான நன்மையும் செய்ததாக நான் பார்த்ததில்லை. அதில் உள்ள உத்தியோகஸ்தர்கள் காருக்கு பெட்ரோல் அடைப்பதற்குள்ள செலவையும், டி. ஏ. யும் எடுத்துக்கொண்டிருக்கிறார்களேயொழிய அவர்கள் நன்கு வேலை செய்வதில்லை. சில கிராமங்களில் ரோடு இல்லை, கக்கூஸ் இல்லை, கிணறு இல்லை என்று விண்ணப்பங்கள் கொடுத்தும் அதைப்பற்றி இது வரையிலும் ஒன்றும் செய்யவில்லை. எனது தொகுதியில் மலைவசிக்கும் மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டில் முதுகெலும்பைப்போல் உழைத்து வேலை செய்து உழைக்கிறார்கள். அவர்களின் நிலையைப் பார்த்தால், அவர்கள் காட்டு மிருகங்களைக் காட்டிலும் கேவலமாக வாழ்கிறார்கள். எனது தொகுதியில் இருந்து வந்திருக்கும் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் அதைப்பற்றி நன்கு எடுத்துச் சொன்னார்கள் இந்த மன்றத்தில். அவர்கள் கடுக்காய் போன்றவைகளை விற்பதற்கு, பாப்பநாய்க்கன்பட்டி, தும்பல் என்ற கிராமங்களில் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் ஏற்படுத்தி, அரசாங்கத்தின் பெயரால் நடத்தினால் அங்குள்ள மக்கள் நன்கு வாழ்க்கை நடத்துவார்கள். அதனால் அரசாங்கத்திற்கும் நன்மை உண்டாகும். ஆனால் இதுவரையிலும் அப்படி ஒன்றும் செய்யப்படவில்லை. அங்குள்ள மக்களுக்கு தண்ணீர் வசதியோ, ரோடு வசதியோ இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் மக்களாக இருக்கிறார்களா என்றால் இல்லை. ஆகவே, அங்குள்ள மக்களுக்கு வேண்டிய உதவிகளை அரசாங்கம் உடனடி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் காலனிகள் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வீடுகளுக்கு 750 ரூபாய் ஆகிறது என்கிறார்கள். அதற்கு 200 ரூபாய் அட்வான்ஸாகக் கொடுக்க வேண்டும். அதற்குள் அந்தமாதிரி வீடு கட்டிவிடலாம். அந்த வீடுகளில் யாரும் குடியேற முன் வரவில்லை. அதற்கு முன் டிமாண்டு நோட்டீஸ் வந்து விட்டது. பணம் கட்டச் சொல்லுகிறார்கள். அந்தக் காலனிகளில் உள்ள வீடுகள் இடிந்து விழுவதால் அங்கு மக்கள் போக அஞ்சுகிறார்கள். ஆகவே, அரசாங்கத்திற்கு, இந்த ஆதிதிராவிட மக்கள் முன்னேற்றமடையவேண்டுமென்று நினைத்தால் இவர்களுக்கு வேண்டிய உதவிகளை உடனடி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

10-45 a.m. SRI N. MARUDACHALAM : உதவி சபாநாயகர் அவர்களே, சென்ற ஐந்தாறு நாட்களாக பெய்த மழையின் காரணமாக பல வீடுகள் இடிந்து விழுந்து விட்டதாக நான் முன்பு சொன்னேன்.

16th November 1957] [Sri N. Maruthachalam]

அதற்குக் காரணம், 10 வருஷங்களுக்கு அதிகமாக குளங்களும், மற்ற ஏரிகளும் மராமத்து செய்யப்படாததுதான் இதற்குக் காரணம். இப் பொழுது குளங்கள் மண் மேடுகளாக பூமிக்குச் சமமாய் இருக்கிறது. தண்ணீர் வந்தால் அதில் தங்க வசதியில்லை. அதிகமாக தண்ணீர் வந்தால் ஏரியை உடைத்துக்கொண்டு போகிறது. ஆகவே, அவைகளை நன்கு மராமத்து செய்திருந்தால் இந்த மாதிரி ஆபத்து அவ்வளவு சீக்கிரம் வந்திருக்காது. ஆகவே, ஆபத்தைத் தடுக்க வேண்டுமென்றால் குளங்களை மராமத்து செய்வதுடன், ஏரிகளை நன்கு உயர்த்தவேண்டும். அடுத்தபடியாக, சங்கனூர்ப்பள்ளம் என்ற இடமிருக்கிறது. அது காட்டாறு பிரதேசம். மழை வந்தால் உடைப்பு ஏற்பட்டு விடும். அங்கு ஆறு இடங் களில் உடைப்பு ஏற்பட்டு இருக்கிறது. அந்த ஆறு இடங்களுக்குப் பக்கத்தில் உள்ள கிராமங்களில் ஹரிஜனச் சேரிகள் தான் அதிகமாக இருக்கிறது. சௌரியாபாளையம் என்ற கிராமத்தில் 268 வீடுகள் நாசமாயிருக்கிறது. அதற்கு கலெக்டரும் வேறு அதிகாரிகளும் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அப்படி நடவடிக்கைகள் எடுத்தும் அங்குள்ள மக்களுக்கு திருப்தியளிக்கும் வகையில் வீடுகள் கட்டிக் கொடுக்கவில்லை. அவர்களுக்கு அதற்கென பொருள் உதவியும் கொடுக்கப்படவில்லை. ஏதோ ஐந்தாறு ரூபாய் கொடுப்பதாக சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் 30 ரூபாய் கொடுக்கப் போவதாக சொல்லப்படுகிறது. அந்த 30 ரூபாய் போதாது. தாழ்த்தப் பட்ட வகுப்பில் உள்ள எல்லா மக்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அடுத்தபடி, எனது ஏரியாவில் வடவெளி என்ற ஊர் இருக்கிறது. அங்கு போடப்பட்டிருக்கிற ரோடு கரடு முரடானதாகும். அந்த ரோடில் பஸ் போக்குவரத்து இருக்கிறது. அதில் ஒரு கர்ப்பவதி போனால் உடனே பிரசவமாகி விடும். அந்த ரோடை உடனடி சீர் திருத்தம் செய்யவேண்டுமென்று கலெக்டரிடம் சொல்லியும் அதைப் பற்றி கவனிப்பார் இல்லை. அடுத்தபடி, வடிவேளாம்பாளையம் என்ற கிராமம் இருக்கிறது. அதில் ரோடே கிடையாது. கொஞ்சம் தண்ணீர் வந்தாலும் ஜனங்கள் அந்தப் பக்கமும் போகமுடியாது, இந்தப் பக்கமும் வரமுடியாது. மத்தியில் தான் இருக்கவேண்டும். அங்கு ரோடு அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடி, ஆலாங்கரை என்ற இடம் இருக்கிறது. அங்கு ஒரு ஆஸ்பத்திரி கட்டப்பட்டிருக்கிறது. அங்குள்ள பழைய ஆஸ்பத்திரி யின்மேல் கூறை இடிந்து விழுந்திருக்கிறது. அதைச் சீர்படுத்தினால் அது அங்குள்ள மக்களுக்கு பிரயோஜனப்படும். அங்கு இப்பொழுது ஒரு ஆஸ்பத்திரி கட்டப்படுகிறது. ஆஸ்பத்திரி கட்டப்படுகிறதே ஒழிய டாக்டர் கிடையாது. டாக்டர் இல்லாத இரண்டு மூன்று ஆஸ்பத்திரிகள் அங்கு இருக்கிறது. ஆகவே, அங்குள்ள ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களைப் போட்டு அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

Sri A. V. P. PERIAVALAGURUVA REDDI : கனம் உதவித் தலைவர் அவர்களே, இப்போது நாட்டில் விவசாயம் முக்கியமாக விளங்குகிறது. விவசாயம் இல்லாவிட்டால் நம்மைப்படைத்த கடவுளிலிருந்து உலகத்தில் இருக்கின்ற மக்கள் எல்லோரும் ஜீவித்திருக்க முடியாது. அப்பேர்ப்பட்ட விவசாயிகளுக்குஅரசாங்கம் சகலவிதமான உதவியும் செய்யவேண்டுமென்று சர்க்கார் என்னவெல்லாமோ செய்கிறார்கள். ஆனால் அதைச் சரியான முறை யில் விவசாயிகள் அனுபவிப்பதாகத் தெரியவில்லை. முதலாவது சொல்லப் போனால் உப்பு, உரம் கொடுப்பது எல்லாம் சரியான சமயங்களில் கொடுப்ப தில்லை. என்னுடைய அனுபவத்தில் பார்த்ததில் இந்த மாதிரியான உரங்கள் வாங்குவதற்கு கொடுக்கப்படுகின்ற லோன் சரியான சமயத்தில் கொடுக்காமல் இருப்பதனால் இதை வாங்கி விவசாயிகள் வெட்டியாக செலவழித்து விடுகிறார்கள். ஆகவே இந்த உரங்களை எல்லாம் அந்தந்த காலங்களில் கொடுக்கவேண்டும். அதோடு யுத்த காலத்தில் கூட வண்டிப் பட்டை, மண்வெட்டி, கொழு முதலியவை குறைந்த விலைக்கு விவசாயி களுக்கு கிடைத்துக்கொண்டிருந்தது. இதை விவசாய டிபார்ட்மெண்டி லிருந்து வண்டிப்பட்டை ஜோடிக்கு 25 ரூபாய்க்கு கிடைத்தது. கொழு கம்பிக்கு 10 அணுவுக்கு கிடைத்தது. மண் வெட்டிக்கு ரூ. 1–8–0 கொடுத் தால் போதும் என்று இருந்தது. ஆனல் இப்போது வண்டிப் பட்டைக்கு ஜோடிக்கு 54 ரூபாய் கொடுத்தாலும் கிடைப்பதில்லை. கொழு கம்பிக்கு 1½ ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. மண்வெட்டிக்கு 6 ரூபாய் கொடுக்க 10 50 a.m.

[Sri A. V. P. Periavalaguruva Reddi] [16th November 1957

வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் அரிசி மாத்திரம் படிக்கு ஒரு அணு கூடி விட்டால் நாட்டிலுள்ள எல்லாப் பத்திரிகைகளும் மற்றத் தலைவர்கள் எல்லாம் கூக்குரல் போட்டு விடுகிறார்கள். ஆனால் அந்த அரிசியை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு எந்த விதமான சலுகையும் கொடுப்பதில்லை. ஆகவே இந்த விதமான வண்டிப்பட்டைகள் முதலியவைகளை அங்கு இருக்கின்ற பிளாக் டெவலப்மெண்டு டிபார்ட்மெண்டு மூலமாக கொடுத்தால் விவசாயிகளுக்கு ரொம்பவும் சௌகர்யமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதோடு ஜில்லா போர்டுகளிலிருந்து ரூரல் டிஸ்பென்ஸரி என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் அங்கு வைக்கப்பட்டிருக்கின்ற எல்லா டிஸ்பென்ஸரிகளையும் மூடி விட்டார்கள். டாக்டர்கள் அங்கு வருவதில்லை. காரணம் அந்தக் கிராமங்களுக்கு வந்தால் ஜாலியாக சினிமா பார்க்கமுடியாது. ஜாலியாக வாக்கிங் போக முடியாது. இம்மாதிரிப்பட்ட ஒரு நிலை ஏற்படுகிறது. இதனால் அங்கு டாக்டர்கள் வந்திருக்க ஆசைப்படுவதில்லை. கிராமத்திலுள்ள ஆட்கள் உற்பத்தி செய்கிற அரிசியை தின்று விட்டுத் தானே நாம் இவ்விதம் இருக்கிறோம் என்று அவர்கள் நினைப்பதில்லை. இவர்களுக்கு அந்த உணர்வே கிடையாது. இந்த நிலைமை இருப்பதினால் அரசாங்கம் இந்த விஷயத்தை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆறு ஏழு வருடங்கள் மெடிக்கல் காலேஜ்களில் படிக்கிறார்கள். இவர்களெல்லாம் கிராமங்களில் வந்து ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் வேலை செய்தால் தான் சர்டிபிகேட் தருவோம் என்று சொல்லவேண்டும். இவ்விதம் செய்தால் தான் டாக்டர்கள் அங்கு வந்து வேலை செய்வார்கள். திடீரென்று ஏதாவது காயம் பட்டால் வெறும் டிஞ்சர் போடுவதற்குக் கூட வழியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் அங்குள்ள ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள். ஏதாவது காயம் பட்டுவிட்டால் ஏதாவது பச்சிலை அல்லது வெங்காயத்தைப் போடலாமா என்று பார்த்து அதை கொண்டு வந்து போடுகிறார்கள். ஆகவே இதற்கு வேண்டிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய படித்த டாக்டர்கள் இல்லையென்றாலும் அங்கு இருக்கின்ற ஆயுர்வேதம், யுனனி முதலிய வைத்தியங்கள் தெரிந்தவர்களையாவது அங்கு நியமித்தால் பொருத்தமாய் இருக்கும். நான் இப்பொழுது கொஞ்சம் சில்லரையாக டிஞ்சர் போன்ற மருந்துகளை வாங்கி வைத்துக்கொண்டு ஏழைகளுக்கு இலவசமாகக் கொடுத்து வருகிறேன். இவ்விதம் கொஞ்சம் வைத்தியமும் செய்து வருகிறேன். இந்த நிலைமை இருக்கிறது. இதை அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பாரதியார் பாடினது மாதிரி ஜாதி எல்லாம் ஒன்று, எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் ஜாதி என்றெல்லாம் பேசப்பட்டு வருகிறது. இன்று ஏழை மக்களாக உண்மையாக இருக்கிறவர்களுக்கு எந்த சலுகையும் கிடைக்கவில்லை. காரணம் அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு பல நன்மைகளும் செய்து வருகிறது. இதனால் பல பிரயோஜனங்களும் இருக்கிறது. ஆனால் குறிப்பிட்டவர்களுக்குத் தான் சலுகை என்று சொல்லும்போது பல விதமான குழப்பம் இருக்கிறது. அதாவது ரெட்டியார் என்றால் கல்விச் சலுகை கிடையாது, கஞ்சம் ரெட்டியார் என்றால் கல்விச் சலுகை உண்டு, இவ்விதமாக இருக்கிறது. இதனால் கள்ளத்தனமாக கஞ்சம் ரெட்டி என்று பொய் சர்டிபிகேட் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதை கல்வி மந்திரி அவர்கள் யோசித்து இதை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 50 ரூபாய்க்கு குறைவாக வரி செலுத்துகிறவர்கள் எந்த ஜாதியாய் இருந்தாலும் அவர்களுக்கு சலுகை அளிக்கப்பட வேண்டும். அன்றாடம் கஷ்டப்பட்டு உழைத்து வாழ்க்கை நடத்தக்கூடியவர்கள் எல்லா ஜாதிகளிலும் இருக்கிறார்கள். அதே போன்று பெரிய பணக்காரர்களும் எல்லா ஜாதிகளிலும் இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கின்ற நிலையில் பல கள்ளத்தனங்கள் தான் நடக்கிறது. 50 ரூபாய்க்கு குறைவாக வரி செலுத்துகிறவர்களுக்கு சலுகை உண்டு என்று சொல்லி விட்டால் சாணன், நாடான், முக்குலத்தோர், நாக்குலத்தோர் என்ற வித்தியாசங்கள் எல்லாம் இருக்காது. இவ்விதம் கள்ளத்தனமாக கஞ்ச ரெட்டி தான் என்று கையெழுத்துப் போட்டு கொடுக்காவிட்டால் கல்லைத் தூக்கி எறிவார்கள். ஆகவே இதை அரசாங்கம் கவனித்து ஒரு முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

16th November 1957]

SRIMATHI KOLANTHAI AMMAL : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தற்பொழுது ஏற்பட்ட அதிக மழையினால் ஹரிஜனங்களின் கிராமங்கள்தான் அதிகமாக பாதிக்கப்பட்டது என்று எதிர்க் கட்சி அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டது ஓரளவு உண்மை என்றே நானும் கருதுகிறேன். குறிப்பாக சங்கனூர்ப் பள்ளத்தில் இருக்கின்ற விவசாயிகள் 8 எக்கர் உள்ளவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இந்த 8 எக்கர் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் ஒவ்வொரு வருக்கும் குறைந்த பட்சம் ஓராயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்து பெரிய பருத்தி, சோளம் முதலியவை பயிர் ஏற்றியிருந்தார்கள். அவர்கள் பயிரேற்றி அனுபவிக்கப்போகும் சமயத்தில் இந்த விவசாய பெருங்குடி மக்களுக்கு இவ்விதமான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதில் அரசாங்கமானது அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த இடங் களில் அவர்கள் நஷ்டமடைந்திருப்பதை பார்த்து அந்த விவசாய பெருங்குடி மக்களுக்கு வேண்டிய உதவி செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அங்கிருக்கின்ற ஒவ்வொரு குடியானவர்களும் 200 ரூபாய், 300 ரூபாய் என்று ஏற்கெனவே மராமத்து செலவு செய்திருக் கிறார்கள். ஆகவே அவர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று அவர்கள் நஷ்டமடைந்தது மாத்திரமல்லாமல் அவர்களுடைய நிலங்கள் எல்லாம் இன்று மண் மேடாக காட்சியளிப்பதைப் பார்த்து அவர்கள் அடுத்த ஆண்டிலும் பயிரேற்ற முடியாமல் ஆகிவிடுமோ என்று பயந்து கொண்டிருக்கின்ற பரிதாபமான நிலைமையில் இன்று அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குறைகளை தீர்ப்பதற்கு உடனடியாக ஏதாவது ஒரு சட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக சூளூரில் இருக்கும் பெரிய குளத்தில் இருக்கின்ற மதகு சரியாக கவனிக்கப் பட்டு வராததன் காரணமாக அதன் அடியில் இருக்கின்ற குறைந்த பட்சம் 75, 76 எக்கர்கள் மண் அரிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அங்குள்ள விவசாய பெருங்குடி மக்கள் கலெக்டர் அவர்களிடம் போய் சொன்ன பொழுது அவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்றால் இவைகள் எல்லாம் குடிகள் சம்பந்தப்பட்ட வேலையாகும், கரை உடைந்து ஏதாவது மதகுகள் க்ஷீணித்துப் போயிருந்தால் அதைப் பார்ப்பதுதான் எங்களுடைய வேலை என்று சொல்லி விடுகிறார்கள்................

SRI K. S. ARDHANAREESWARA GOWDER : On a point of order. ஸார், எதிர்க்கட்சி முதல் பெஞ்சில் இடம் பூராவும் காலியாக இருக்கிறது. சர்க்கார் கட்சியில் இம்மாதிரி இருந்தால் எதிர்க்கட்சியிலிருந்து புகார் சொல்லுகிறார்கள். இம்மாதிரி காலியாக இருப்பது வருத்தமாய் இருக்கிறது. இது முறை தானா என்று கேட்க விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : எதிர்க்கட்சியில் முதல் பெஞ்சில் இல்லை யென்றாலும் பின்னால் உள்ள பெஞ்சுகளில் எதிர்க்கட்சிக்காரர்கள் இருக்கிறார் கள். கனம் அங்கத்தினர்கள் சொல்லுவதை கனம் அமைச்சர் அவர்கள் தான் கேட்கவேண்டுமே தவிர எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் இருந்து கேட்டாக வேண்டுமென்றில்லை.

SRIMATHI KOLANTHAI AMMAL : குடி மராமத்திலே வேலை செய்யவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். குடி மராமத்திலே ரூ. 200 வசூல் செய்து, சிமட்டிப் பைகளை வாங்கி, அவைகளிலே மணலைப் போட்டு 150 சாக்குகளைப் போட்டதில் தண்ணீர் ஓரளவு குறைந்திருந்தது. அதற்கு மேலும் குடிமக்கள் அடைத்துக்கொண்டிருக்கிற சமயத்தில் மேலே வந்த தாசில்தார் தண்ணீரைப் பிடுங்கிவிட்டார்கள். 150 சாக்குகளும், அதற் காகத் தயாரித்த மற்ற சாக்குகளும் அடித்துக்கொண்டு போய்விட்ட கார ணத்தால், அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பு இல்லாமல், குடிமக்கள் மட்டும் செய்கின்ற வேலையானது, ஒவ்வொருநாளும் தங்களுடைய பெரு முயற்சியானது வீணாகிக் கொண்டிருக்கிறது என்று வட்டார மக்கள் என்னிடத்திலே சொல்லி, இங்கே ஞாபகப்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஓரளவு தனியாக நிதி ஒதுக்கியாவது குடிமராமத்து செய்யவேண் டிய வேலையை அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பினாலே செய்யவேண்டு

மென்று அவர்கள் ஒப்புக்கொள்ளுகிற காரணத்தால், குடிமக்கள் செய்யும்போது தாசில்தார் ஒற்றுமை இல்லாது அவர்களுடைய மதகு உடைந்துவிடும் என்று தண்ணீரைப் பிடுங்கிவிடுகிற காரணத்தால், இரண்டு பக்கத்தில் நஷ்டம் ஆகிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உயர்நிலைப்பள்ளிகள் வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கொடுக்கப்படுகிற சலுகையானது ஓரளவு நியாயமான அளவுக்கு இல்லை என்பதை நேரில் பார்த்த அனுபவத்தை நான் சொல்ல முற்படுகிறேன். காரணம் என்னவென்றால், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு முறை இதே சபையில் ஒரு கனம் அங்கத்தினருடைய கேள்விக்குப் பதிலளிக்கையில், 'கவுண்டமார்கள் முன்னேற்றமானவர்கள்; அவர்களை பின்னேற்றத்திற்குக் கொண்டுவரவேண்டுமா? என்று கேட்டார்கள். ஆனால், நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கவுண்டர் என்று போட்ட மாத்திரத்திலே அவர்கள் முன்னேற்றம் ஆய்விட்டார்கள் என்று சொல்வது அவ்வளவு பொருத்தம் இல்லை. இன்று, கோயமுத்தூர், சேலம், முதலிய ஜில்லாக்களில் விவசாய மக்கள் பெரும்பாலானவர்கள் கவுண்டமார்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு விவசாய காலத்திலேகூட ஓரளவு அதிக லாபம் கிடைக்காத காரணத்தால் மேலும் மேலும் கடன் வாங்கி, அவர்களுடைய விவசாயத் தொழிலே செய்யும்படியான நேரத்தில், தங்களுடைய மக்களை உயர்ந்த படிப்புக்கு கொண்டு வருவதற்கு முடியாதவர்களாக இருக்கிற நிலைமையில், இம்மாதிரியான சலுகைகளை அந்த முற்போக்கு வகுப்பிலேயுள்ள ஏழைப் பிள்ளைகளுக்கும் கொடுக்கவேண்டும் என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தவேண்டும், அல்லது கவுண்டர்களை பிற்போக்கு வகுப்பிலாவது சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று நான் இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மூன்றாவதாக, எங்கள் ஊர் கணபதி டெக்ஸ்டூல் கம்பெனிக்கு முன்னால் ஒரு பாலத்தைப்பற்றி மராமத்து இலாகா அமைச்சரிடம் நான் ஞாபகப்படுத்தினேன். இப்பொழுது 15 நாட்கள் ஆய்விட்டன. அந்த விண்ணப்பத்திற்குப் பின்னால்தான் அங்கு போர்ட் போடப்பட்டிருக்கும் என்று நான் எண்ணுகிறேன். பொது மராமத்து இலாகாவுக்கும் அந்தப் பாலத்திற்கும் தொடர்பு இல்லை என்று எழுதப்பட்டிருக்கிறது. ரயில்வேக்காரர்கள் அந்தப் பாலத்தை எப்பொழுது பார்த்தார்களோ தெரியாது. குறைந்தபட்சம் 500 விண்ணப்பங்களுக்கு மேல் நாங்கள் கொடுத்திருப்போம். அன்றாடம் அந்தப் பாலத்தினுடைய திறமை குறைந்துக் கொண்டு வருகிறது என்பதை நாம் நேரிலே பார்க்கலாம். சுமார் 15 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேல் அன்றாடம்—மூன்று ஷிப்டுகளுக்கு—இதன் வழியாக வேலைக்கு போய் வருகிறார்கள். அந்தப் பாலம் கறடு, முறடான நிலையில் இருக்கிறது. அதன்மேல் சைக்கிள்கூட போகமுடியாத நிலையில் இருக்கிறது. அதன் மேல் பஸ் செல்ல முடியாது. ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் கூட அந்தப் பகுதிக்கு வருவது கிடையாது. ஆகவே, இந்த நிலைமையை மாற்றி, எந்த டிபார்ட்மெண்டாக இருந்தாலும் பொது மக்களுடைய நலனுக்காக ஒரு தனி சட்டம், அல்லது அவசர சட்டம் கொண்டுவந்தாவது அந்தப் பாலத்தைச் சீரமைக்கவேண்டுமென்பதையும் நான் ஞாபகப்படுத்துகின்றேன்.

மக்களுடைய கல்வியறிவை முன்னேற்றவேண்டுமென்று கருதுகிற நம்முடைய அரசாங்கம், பொருளாதாரத்திலே குறைவான நிலைமையில் இருக்கும்படியான உண்மை விவசாயிகளுடைய நிலைமையை ஓரளவு கண்கொண்டு பார்க்கவேண்டும் என்பதை நான் விவசாயிகளின் சார்பாக கூறிக்கொள்கின்றேன். எங்கள் தொகுதியிலே இருக்கும் பெரும்பாலான விவசாயிகள் இம்மாதிரியான நெருக்கடியான ஒரு சம்பவத்திலே அகப்பட்டுக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் பரிதாபமான முறையிலே விண்ணப்பங்களைச் செய்கிறார்கள். பலன் ஒன்றும் கிடைக்காதவர்களாக அவர்களுடைய மனம் கஷ்டப்படுகிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இம்மாதிரியாக ஒதுக்கப்பட்டிருக்கும் மொத்தப் பணத்திலிருந்து ஹரி ஜனங்களுக்கு வீடு கட்டுகிற நிலைமையில் குறைந்த எண்ணிக்கையானாலும் நல்ல முறையிலே வீடுகள் கட்ட பணம் கொடுக்க வேண்டுமேயொழிய,

ஐந்தாறு நாட்களிலேயே பலன் வீணுகப் போகக்கூடிய நிலையில் கொடுக்கக்கூடாது. ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக வீடு ஒன்றுக்கு 30 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டு, அந்த வீடுகள் கட்டிய மூன்ருவது நாளிலேயே வீழ்ந்துவிட்ட செய்தியைப் பார்க்கிருேம். வீடு ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட ரூ. 30 கொடுத்த மூன்ருவது நாளில் பலன் இல்லாமல் போகிறது. இந்த நிலைமையை மாற்றி, ஒரு குறைந்த அளவு கிராமங்களில் வேலை செய்தாலும், அது நிரந்தர பலனுள்ள வேலையாக இருக்கவேண்டும். ஏதோ டெம்பரரியாக அளிக்கப்படுகிற உதவிப் பணம் வீணுன பணமாக கருதப்படுகிறது என்பதை அரசாங்கத்திற்கு ஞாபகப்படுத்திக்கொள்கிறேன்.

சங்கனுர் பள்ளம் ஆறு இடங்களில் உடைபட்டிருக்கிறது. அதற்குத் தண்ணீர் மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த மருத மலையிலிருந்து வருகிறது. அந்த ஜில்லாவினுடைய ஒரு தனிப்பட்ட நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறது. பெருமழை காரணமாக, சங்கனுர் பள்ளத்தில் மணல் மேடிட்டிருப்பதால், விவசாயிகள் சிக்கித் தடுமாறுகிருர்கள். அடுத்த ஆண்டுக்கு என்ன விவசாயம் செய்வது என்று தெரியாமல் இருக்கிற நிலையில் உள்ள விவசாயிகளுக்கு அரசாங்கம் ஒரு நல்ல உதவியைச் செய்யவேண்டுமென்று ஞாபகப்படுத்தி என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI D. S. AUTHIMOOLAM: உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இந்த உபமான்யக் கோரிக்கையைக் கொண்டு விவசாயிகளுககு ஜாஸ்தியான உதவி செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். முக்கியமாக, கம்யூனிடி பிராஜெக்ட், நாஷனல் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம் அமுலில் உள்ள இடங்கள் தவிர, மற்ற பல கிராமங்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் சென்ற ஐந்தாறு ஆண்டுகளாக பருவ மழை தவறியதனுல் ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது மழை பெய்துவிட்டாலும், எல்லோருமே எழ்மை நிலையில் இருப்பதால், ஏழெட்டு வருஷங்களாக தங்களிடம் இருக்கும் ஆடு மாடுகளையும் விற்று சாப்பிட்டு விட்டதால் அவர்களுக்கு மழை பெய்தும் பிரயோஜனப்படாத நிலைமையில் இருக்கிருர்கள். நல்ல முறையிலே உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தி வாழ்க்கையை செம்மைப் படுத்திக்கொள்வதற்கும், நாட்டினுடைய வளத்தைப் பெருக்குவதற்கும் அவர்களால் முடியவில்லை. ஆகவே, சர்க்கார் இதை ஒரு முக்கியமான தீர்மானமாக கவனத்தில் எடுத்து, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜில்லாக் கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். போதிய தொகைகளை அப்பேர்ப்பட்ட கிராமங்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய அதிகாரத்தையும், தொகையையும் கலெக்டருக்கு வழங்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். 11-06 a.m.

அடுத்தபடியாக, எனக்கு இரண்டு தினங்களுக்கு முன்பு ஒரு தகவல் வந்தது. திருநெல்வேலி ஜில்லா, திருச்செந்தூர் தாலுகா, காயல் பட்டிணம் வட பக்கம் கிராமங்கள் பக்கத்திலிருக்கும் சேர்ந்தரமங்கலம், ஆத்தூர் கிராமங்களிலிருந்து கடற்கரையோரப் பிரதேசங்களில் ஆயிரம் ஏழைக் குடும்பங்கள் காந்தி-இர்வின் ஒப்பந்த அடிப்படையில் உப்புப் பாத்தி போட்டிருந்தார்கள். புறம்போக்கு நிலங்களில் மேடு பள்ளங்களைச் சீர்ப்படுத்தி, வெகு பிரயாசை எடுத்து, 2,000, 3,000 ரூபாய் வரையில் எக்கர் ஒன்றுக்குச் செலவு செய்து, பல ஏழைக் குடும்பங்கள், வாழ்க்கையில் அடித் தட்டில் உள்ளவர்கள், அந்த நிலத்தைச் செம்மைப் படுத்தி, அந்தப் பாத்திகளை அனுபவித்து வந்தார்கள். ஆனுல் இப்பொழுது திடீரென்று அரசாங்கம் அந்த ஏழை மக்கள் பிழைத்து வந்த பிழைப்பிலிருந்து அப்புறபடுத்தவேண்டுமென்பதற்காக 'அக்விஸிஷன் ப்ரொஸீடிங்ஸ்' எடுக்க ஆரம்பித்து, வடநாட்டுக் கம்பெனி என்று சொல்ல வேண்டியிருக்கிறது—தென்னுட்டிலே முதலாளிமார்கள் தொழில் ஆரம்பிப்பதற்கு முன்வருவது இல்லை, அதைக் குறைகூறவில்லை—சாரங்கதரா கெமிகல் கம்பெனியார் அந்த இடங்களையெல்லாம் வாங்கிவிட்டார்கள். அந்த இடங்களில் எக்கர் ஒன்றுக்கு மூவாயிரம் ரூபாய் வரையில் செலவு செய்த ஏழை மக்களை ஜீவனத்திற்கு வழியில்லாமல் அப்புறப்படுத்துவது

[Sri D. S. Authimoolam] [16th November 1957

நியாயத்திற்கு விரோதமான காரியம். அப்புறப்படுத்தினாலும் அவர்களுக்குச் சரியான நஷ்ட ஈடு கொடுக்காமல் அப்புறப்படுத்துவது ரொம்பவும் அநீதியான காரியம். ஆகவே, உப்புப் பாத்தி போட்டுப் பிழைக்கும் ஆயிரக்கணக்கான ஏழைகளை சர்க்கார் காப்பாற்றவேண்டும். அந்தப் புறம்போக்கு நிலங்களிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தக் கூடாது. அப்படி அவர்களை அப்புறப்படுத்தாமலிருந்தால், 5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் ரூபாயை செலவு செய்தவர்கள் வாழ்க்கை நடத்துவது சாத்தியப்படும். அவர்களுக்குச் சாசுவதமாக அந்த நிலங்கள் பட்டா செய்துகொடுக்கப்பட வேண்டும். காந்தி-இர்வின் ஒப்பந்த அடிப்படையில் அவர்கள் இந் நாட்டில் உப்புத் தொழில் செய்து நன்றாக வாழக்கூடியவர்களை தங்களுடைய உடைமைகளை விற்று அந்தத் தொகையைக் கொண்டு நிலத்தைச் செம்மைப் படுத்தியவர்களை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப் பார்க்கிறார்கள். மேற்கொண்டு 'கவர்ன்மெண்டு ஆப் இண்டியா ஸால்டு கண்டிரோலரி'டமிருந்து 1948-ம் வருஷத்தில் ஒரு உத்தரவு வந்ததில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. ஆகவே, இதை அவசியம் சர்க்கார் கவனித்து 'அக்விஸிஷன் ப்ரொஸீடிங்ஸ்' 'ஸ்டே' பண்ணுவதற்கு வேண்டிய உத்தரவை அனுப்பும்படியாக தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் சோஷலிஸ சமுதாயப் பாணியில் செல்கின்ற சர்க்கார், அம்மாதிரி கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கும்போழுது, இப்படிப்பட்ட காரியங்களை தீவிரமாக கவனிக்கவேண்டியது சர்க்கார் கடமை. இதை அவர்கள் 'காட்டேஜ் இண்டஸ்ட்ரி' மாதிரி செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் ஞாபகப்படுத்துகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து நிர்வாக சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்து நிர்வாகத்தில் ஒவ்வொரு இடத்திலும் மந்திரி சபையினுடைய தலையீடு ரொம்பவும் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாகாணத்தில் 'லோகல் போர்டு' நிர்வாகம் சீர்கேடான நிலைமைக்கு வந்துவிட்டது என்பது வருந்தத்தக்க விஷயம். உதாரணமாக ஓரிரண்டு விஷயங்களை மட்டும் குறிப்பிடுகிறேன். திருநெல்வேலி ஜில்லாவில், அம்பாசமுத்திரத்தில் கீழாம்பூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே பஞ்சாயத்து எலெக்ஷன் நடப்பதற்காக சுமார் 1,000 மக்கள் வந்து கூடியிருந்தார்கள். பக்கத்திலிருந்த விக்ரமசிங்கபுரம் ஹார்வி மில்லிலிருந்து ஏராளமான தொழிலாளிகள் சம்பளத்தையும் இழந்து லீவு போட்டுவிட்டு வோட்டுப் போடுவதற்காக வந்திருந்தார்கள். கடைசியில் எலெக்ஷன் நடக்கவில்லை. எதோ ஒரு மொட்டை பெடிஷன் (அனானிமஸ் பெடிஷன்) யாரோ மந்திரிக்கு போட்டுவிட்டார்கள். உடனே ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிலிருந்து போனில் பேசி, இங்கிருந்து உடனே தந்தி பறந்துவிட்டது. முதல் நாள் இரவே டி.பி.ஓ.-வுக்கு எலெக்ஷனை ஒத்திவைக்கும்படி தந்தி கிடைத்துவிட்டதால், அன்று எலெக்ஷன் நடக்கவில்லை. ஆனால் இதுபற்றி கிராம மக்களுக்கு தகவல் இல்லை. இதையெல்லாம் பார்க்கும்பொழுது நம் நாட்டில் அரசாங்கம்தான் நடக்கிறதா, அல்லது காங்கிரஸ் கமிட்டி ஆட்களுக்கு பணம் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு நடக்கிறதா என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. இது ரொம்பவும் வருத்தத்தோடு சொல்லக்கூடிய விஷயம். ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் உள்ளவர்களுக்கு ரூபாய் கொடுத்துவிட்டால், உடனே அவர்கள் போன் பேசிவிடுகிறார்கள். அரசாங்கம் தான் நடக்கிறதா, அல்லது தன்னுடைய கட்சி ஆட்களுக்கு சலுகை கொடுக்கவேண்டுமென்று, கட்சிகாரர்களுக்கு வரும்படி கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு காரியங்கள் செய்யப்படுகிறதா ? பண்டித ஜவஹர்லால் தலைமையில் நடக்கக்கூடிய சர்க்கார் தானா இது ? இதை ரொம்பவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளுகிறேன்.

திருச்செந்தூர் தாலூகாவில் படக்கப்பத்து என்ற ஒரு ரெவின்யூ கிராமம் இருக்கிறது. பெரியதாழை என்ற ஒரு சிறு கிராமத்தை அதிலிருந்து தனியாக பிரித்து ஒரு பஞ்சாயத்து அமைத்திருக்கிறார்கள். வருஷத்திற்கு மொத்தம் ரூ. 2,000 தான் வருமானம் வரும். நூறு வீடுகள் உள்ள பெரியதாழை என்ற கிராமத்தை தனியாகப் பிரித்து தனிப் பஞ்சாயத்தாக அமைத்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் 'பொலிடிகல்

16th November 1957] [Sri D. S. Authimoolam]

பிரெஷரால்' ஏற்படுகிறது. இதேமாதிரிதான் நான்குனேரி தாலூகாவில் உபரி என்ற கிராமம் இருக்கிறது. அதை நாடார் உபரி, பரதர் உபரி என்று பிரித்திருக்கிறார்கள். நாடார் வேறு, பரதர் வேறு என்று பிரித்திருப்பது துரதிர்ஷ்ட வசந்தான். 'லோகல் போர்டு' மந்திரி ஸ்ரீமதி லூர்தம்மாள் ஸைமன் அவர்களுடைய சமூகத்தினர்கள் அங்கே இருக்கிறார்கள். அங்கே எலெக்ஷனுக்கு எல்லா ஏற்பாடுகளும் நடந்துவிட்டது. காலை 8 மணிக்கு ஆபீஸருக்கு எக்ஸ்பிரஸ் தந்தி வந்துவிட்டதால் எலெக்ஷன் நடக்கவில்லை. அப்படி இந்த ஊரிலே இரண்டு ஜாதியாக பிரித்திருக்கிறார்கள். இப்படிச் செய்கிறவர்கள் ஜாதியை ஒழிக்கின்ற சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு, இ. வி. ராமசுவாமி நாயக்கரை என்ன குறை கூற வழி இருக்கிறது? ஒரே ரெவின்யூ கிராமத்தை பரதர் கிராமம், நாடார் கிராமம் என்று இரண்டாக துண்டாடியிருக்கிறார்கள். அங்கே தனித்தனியாக கிடைக்கக்கூடிய வருமானத்தை வைத்துக்கொண்டு பிரமாதமாக எந்தவிதமான நிர்வாகத்தையும் செய்துவிட முடியாது. அங்குள்ள ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள் சொல்லிவிட்டால், அதற்கு ஒரு 'கன்ஸிடரேஷன்' கூட இல்லை. உடனே தந்தி பறக்கும், போன் பேசுவார்கள். வெள்ளைக்காரர் காலத்தில் கூட இப்படியா காரியங்கள் நடந்தன? ஒரு சிறிய விஷயமாக இருந்தாலும், அது 'பிராபர் சானல்' வழியாக வரவேண்டும். பிறகு அதை விசாரித்து ஒரு முடிவுக்கு வருவார்கள். இப்பொழுது ஒரு பெரிய சமாசாரமாக இருந்தாலும்கூட, காங்கிரஸ்காரர்கள் சொல்லிவிட்டால், உடனே எலெக்ஷனை நிறுத்தி தந்தி பறந்துவிடும். எந்த விஷயத்திலும் நீதி தவரக்கூடாது. நீதியை வைத்துத்தான் ஒரு அரசாங்கம் என்றும் நிலைத்து இருக்கவேண்டும். இம்மாதிரி திருநெல்வேலி ஜில்லாவில் பஞ்சாயத்து எலெக்ஷன் ஊழல்கள் 20, 25 இருக்கின்றன. நான் உதாரணத்திற்கு ஒன்று, இரண்டு சொன்னேன். இம்மாதிரி 10 ஜில்லாக்களில் இருந்தால், ஒவ்வொரு ஜில்லாவிலும் 50 ஊழல்கள் இருந்தால், மொத்தத்தில் 500 ஊழல்கள் ஆகிவிடுகின்றன. இன்னும் இது மாதிரி எத்தனையோ இலாக்காக்களில் எத்தனை ஊழல்கள் மலிந்து கிடக்கின்றனவோ, பகவானுக்குத்தான் வெளிச்சம். ஆகவே ராஜ்ய சர்க்கார் காரியங்களை நல்ல முறையிலே 'இம்பார்ஷியலாக' செய்யவேண்டும். மந்திரிகளுக்கு 'கபாஸிடி' இருப்பதோடு, அவர்கள் 'இம்பார்ஷியலாகவும்' நடந்துகொள்ளவேண்டும். 'கபாஸிடி' இல்லாவிட்டாலும் பரவாயில்லை, 'பார்ஷியாலிடி' என்பது அறவே கூடாது. முக்கியமான மந்திரி அவர்கள்கூட இங்கே இருக்கிறார்கள். அவர்கள் முன்னிலையில் நான் இதைச் சொல்லிக்கொள்ள ரொம்ப சந்தோஷம். இம்மாதிரி குழப்பங்களையும், குறைபாடுகளையும் உடனடியாக நீக்கவேண்டும். 'நாம்கேவாஸ்தைக்காக' வேண்டுமானால் மந்திரியாக வைத்துக்கொண்டு அந்த இலாகாவை வேறு ஒருவருக்கு மாற்றிவிடுவது நல்லது. கட்சி சார்பில் உள்ளவர்கள் சொல்லுவதைக் கேட்டு நாட்டிலே நிர்வாகம் நடத்தும் முறை இருக்கக்கூடாது. கட்சி சார்பில் என்ன சொன்னாலும் அதைக் கேட்டுவிடுவார்கள் என்ற சீர்கேடான நிலைமை ஏற்படக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேற்கொண்டு, 'கம்யூனிடி பிராஜெக்டு' என்.ஈ.எஸ். ஸ்கீமில் போடப்பட்ட ரோடுகள் இன்னும் சரியாக 'மெயின்டைன்' செய்யப்படவில்லை. அதனால் அநேக ரோடுகள் 'டிடீரியரேடிங் கண்டிஷனுக்கு' வந்துவிட்டது. இன்னும் அவைகள் 6 மாதங்களுக்குள்ளாவது கவனிக்கப்படாவிட்டால் ரூ. 5,000, 10,000 செலவில் கிராம மக்கள் உதவியோடு போடப்பட்ட ரோடுகள் 'டிஸ்அப்பியர்', ஆகிவிடும். அவைகள் கண்ணுக்கே தெரியாமல் போய்விடக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த ரோடுகள் விஷயத்தில் 'ஸ்பெஷல் அடென்ஷன்' கொடுத்து துரிதமாக வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். 'கம்யூனிடி டெவலப்மெண்டு', 'பிளாக் டெவலப்மெண்டு' நிதியிலிருந்து இந்த ரோடுகளை பராமரிப்பதற்கு முடியாது. ஆகையால் இந்த ரோடுகளை சர்க்கார் நிர்வாகத்தில் எடுத்துக்கொள்ளுவதற்கு அவசரமாக உத்தரவு பிறப்பிக்கவேண்டும். முக்கியமாக நான் சொல்லவேண்டிய

[Sri D. S. Authimoolam] [16th November 1957

விஷயங்களைச் சொல்லிவிட்டேன். அவைகளை கவனத்தில் கொண்டு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று மீண்டும் மன்ருடி கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

Sri T. P. ELUMALAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உபமான்யக் கோரிக்கையை ஆதரித்து சில அபிப்பிராயங்களைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். பிற்பட்ட மக்களுக்கு, ஹரிஜன மக்களுக்கு கூடுமான வரையில் நல்ல உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன். இதற்கு முன்ஞல் பல நல்ல காரியங்களை இந்த சர்க்கார் செய்ததை நாம் எல்லோரும் நன்ருக அறிவோம். ஹரிஜன மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு சர்க்கார் அதிகமாக ஒன்றும் செய்யவில்லை என்று எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் சொன்ஞலும், அவர்களுக்கு வேண்டிய பலவிதமான வசதிகள் செய்யப்பட்டிருப்பது கிராமங்களில் காட்சி அளிப்பதை நாம் பார்க்காமல் இருக்கமுடியாது. குறிப்பாக ஹரிஜன மக்களுக்கு ஹாஸ்டல்கள் கட்டிக்கொள்வதற்கு ரூ. 20,000, 30,000 மான்யமாக இந்தச் சர்க்கார் கொடுத்திருக்கிருர்கள். இதை நாம் யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக வண்ணுரப்பேட்டையில் இருக்கும் ஒரு ஹாஸ்டலுக்கு இந்த சர்க்கார் ரூ. 50,000 மான்யமாகக் கொடுத்திருக்கிருர்கள் என்பதை தெரிவித்துக்கொள்ள பிரியப்படுகிறேன். ஏதோ ஓரளவு இருக்கிற உண்மைகளைச் சொல்லி மேலும் பல வசதிகளைச் செய்ய முயற்சி செய்யவேண்டும். இருப்பதை அப்படியே மறைத்துவிட்டு பேசுவதில் பிரயோஜனம் இல்லை. இருப்பதை மறைப்பதே எதிர்க்கட்சியினுடைய நோக்கமாக இருக்கிறது. அதஞல் எவ்வித பயனும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். கனம் ஆதிமூலம் அவர்கள் எப்போது பேசிஞலும் காங்கிரஸ் கட்சியின் மீது ஒரேயடியாகப் புகாராகப் பேசுவதுதான் வழக்கம்.

Sri D. S. AUTHIMOOLAM : On a point of order, இந்த மெம்பர் அனுவசியமாகப் பேச எத்தனிக்கிருர். அதைத் தடுக்கவேண்டும்.

Sri T. P. ELUMALAI : அவரைப்போல நான் அனுவசியமாக எந்த விஷயத்தைப் பற்றியும் பேசமாட்டேன் என்று சொல்ல விரும்புகிறேன். எதற்காகச் சொல்ல வந்தேன் ? சொந்த விஷயத்தை மனதில் வைத்துக்கொண்டு ஹரிஜன மக்களுக்குப் பரிந்து பேசுவது போல யாரும் பேசவேண்டாம். ஹரிஜன மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் சர்க்கார் அநேக நன்மைகளைச் செய்து வந்திருக்கிறது என்பதை மறைத்துப் பயன் இல்லை. மேலும் சில நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்வதுதான் நியாயமாக இருக்கும்.

குறிப்பாக ஹரிஜன மக்கள் வசிப்பதற்கு வீடு கட்டிக்கொடுத்திருக்கிருர்கள். கண்டிராக்டர்கள் லாபத்தைக் கருதி அவ்வீடுகளை சரியான முறையில் கட்டுவது இல்லை. ஆகவே ஹரிஜன மக்களிடத்தில் இருக்கும் படியான முக்கியஸ்தர்கள், கூட்டுறவு சங்கங்கள் இவற்றைக் கொண்டு அவ்வீடுகளைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் அவ்வீடுகள் நல்ல முறையில் அமையும்.

மேலும் பல சேரிகளில் மின்சார விளக்குகள் அமைக்கப்பட வில்லை. பஞ்சாயத்து போர்டுகள் இதர பகுதிகளுக்கு விளக்குப் போடும்போது சில இடங்களில் சேரிகளில் விளக்கைப் போடாமல் வைத்திருக்கிறது. அவ்விடங்களில் எல்லாம் உடனடியாக விளக்குப் போட ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கெங்கு அதுமாதிரியாக விளக்குப்போடவில்லை என்கிற விசாரணையை சீக்கிரம் நடத்தி அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும் பல ஆண்டுகளுக்கு ஏழை மக்கள் வசித்துக் கொண்டிருக்கிற, சாகுபடி செய்து கொண்டிருக்கிற இடங்களை அந்த ஹரிஜனங்களுக்கே ஜாரி செய்யாமல் இருந்து வருகிறது. இதற்கும் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

DEPUTY SPEAKER : The hon. Member should conclude soon. He is repeating his arguments. Yesterday the Hon. Minister for Revenue dealt with this point.

16th November 1957]

SRI T. P. ELUMALAI: குறிப்பாக பொன்னேரி, திருவள்ளூர் தாலூக்காவில் உள்ள ஹரிஜன குடிசைகளில் அநேகம் மழையினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், ஹரிஜன இலாகா அமைச்சர் ஸ்ரீ கக்கன் அவர்களும் அநேக இடங்களுக்குச் சென்று அந்த மக்களுக்கு ஆறுதலாக உதவி அளித்திருக்கிறார்கள். இந்த முறையில் நமக்குள்ள கடமையை நிறைவேற்ற உடனடியாக அந்த விவரங்கள் எல்லாவற்றையும் கணக்கு எடுத்து உதவி செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தை நல்ல முறையில் துரிதமாக நிறைவேற்றவேண்டும். செங்கல்பட்டு ஜில்லாவில் புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. பெரிய நிலச்சுவாந்தார்களுக்குக் கூட கனம் ராமசாமி முதலியார், எதிர்க்கட்சித் தலைவருக்குக் கூட இருக்கும்படியான நிலங்கள் புறம்போக்காக இருக்கின்றன. இவற்றை யெல்லாம் சர்க்காரும், தனிப்பட்டவர்களும் கொஞ்சம் தாராளமாக முன்வந்து அந்த ஏழை மக்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

***SRI K. SATTANATHA KARAYALAR:** கனம் சபா நாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது நடக்கும் விவாதத்தில் பங்கு எடுத்துக்கொண்டு சில வார்த்தைகள் சொல்ல ஆசையுறுகிறேன். இந்தச் சமயத்தில் கன்னியாகுமரி, செங்கோட்டை தாலுக்காவில் உள்ள குறைகளைப் பற்றி, அவர்கள் எந்த அளவு உதாசினப்படுத்தப் படுகிறார்கள் என்பதைப் பற்றிச் சொல்ல ஆசையுறுகிறேன். கழிந்த மானியக் கோரிக்கையின் காலத்திலும் அந்த வட்டாரத்திலுள்ள திட்டம் எதற்கும் பணம் ஒதுக்கப்படவில்லை. இந்த மானியக் கோரிக்கையிலும் சுமார் 77½ லட்சம் அனுமதிக்கிறோம். இதில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் அந்த வட்டாரத்திற்குச் செலவு செய்யக்கூடிய ஒரு இனம் இருக்கிறதே தவிர வேறு எந்தவிதமான திட்டமும் திட்டப்படவில்லை.

குறிப்பாக பள்ளிக்கூடம், உபாத்தியாயர்கள் இவர்களுடைய நிலைமை அங்கே மோசமாக இருக்கிறது. ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பயிற்சி பெற்று இருக்கும் ஆசிரிய ஆசிரியைகள் ஆயிரம் பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இந்த ராஜ்யத்தோடு அந்தப் பகுதி சேர்க்கப்படாமல் இருந்திருந்தால் இந்தக் காலத்திற்குள்ளாக அவர்களுக்கு வேலை கிடைத்திருக்கும். 1955-ல் பயிற்சியைப் பெற்றுவிட்டு, அவர்கள் இனியும் தங்கள் வருங்காலம் என்ன என்பதைப் பற்றி தெரியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்காமல் இருக்கும்போது மேலும் 400 மாணவர்கள் இவ்வாண்டு பயிற்சி பெற்று வருகிறார்கள். ஆசிரியர் உத்தியோகம் அவர்களுக்கு கிடைக்காது என்று தெரிந்தாலும் அவர்கள் வேறு வேலைக்காவது போக முயற்சிப்பார்கள். இப்படி சர்க்கார் பணத்தை ஏராளமாகச் செலவு செய்துவிட்டு, அவர்களையும் வேலை இல்லாத் திண்டாட்டத்திற்கு உள்ளாக்குவது சரியில்லை. இதை கவனிக்கவேண்டும். மேலும் செங்கோட்டையில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியில் பைபர்கேடெட் கோர்ஸ் ஏற்படுத்துவதற்காக ஏராளமான பணத்தை ஒதுக்கி, அதற்கு வேண்டிய சாமான்கள் வாங்கியாகிவிட்டது. கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. ஒரு லட்சத்திற்கு மேல் செலவாகியிருக்கிறது. ஆனால் இன்னமும் அந்தப் பள்ளியை ஆரம்பிக்காமல் வைத்திருக்கிறார்கள். அதை இனியும் திறப்பதில் காலதாமதம் செய்வது நல்லதல்ல என்று சொல்லிக் கொள்கிறேன். உடனடியாக அதை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு குடி தண்ணீர் வசதிகள் செய்து கொடுக்க பல குடி தண்ணீர் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகள் எந்த அளவுக்கு அந்தப் பகுதி மக்களுக்கு இந்த திட்டம் பயன்படுகிறது? துரதிஷ்டவசமாக அங்கு குடி தண்ணீர் தட்டு நீடித்து வருகிறது.

செங்கோட்டைத் தாலூகா மிகவும் வளமான பிராந்தியம் என்ற தவறான அபிப்பிராயம் நிலவி வருகிறது. மழை அதிகமாக உள்ள இடம் என்பது உண்மை. ஆனால் செங்கோட்டை, குற்றாலம் பகுதிகள் மலையும் பள்ளமும் ஆக இருப்பதால் ஒரு சில கிராமங்களில் தண்ணீர் தங்காததால் வரட்சியாகவும் ஒரு சில இடங்களில் தண்ணீர் அதிகமாகி உடைத்துக் கொண்டு போகக்கூடிய அளவுக்கு மிகுதியாகவும் உள்ளது. குற்றாலம்

போன்ற பகுதிகளில் மூன்று மாதம் பலமாக மழை இருக்கும். அப்பொழுது அங்கு தண்ணீர் அதிகமாக இருக்கும். ஆனால் மூன்று மாதம் கழிந்து விட்டால் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைப்பது அறிது. இப்பகுதிகள் பலைச் சரிவாக இருப்பதால் பள்ளமாக இருக்கும் பகுதிகளுக்கு தண்ணீர் சென்று விடுகிறது. அங்கு தேக்கி வைக்கும் குளங்களின் மருமத்து பல ஆண்டு களாக செய்யப்படவில்லை. மார்த்தாண்ட வர்ம மகாராஜா ஆண்ட காலத் திலே அந்த பகுதிகளிலுள்ள குளங்களை மராமத்து செய்தார்கள். அதற் குப் பிறகு, ஆயக்கட்டுக்கு எவ்வளவு தண்ணீர் பாயுமோ அந்த அளவு தண்ணீர் பாய வசதி இருக்கும்படியாக அந்தக் குளங்கள் மராமத்து செய்யப்படவில்லை. அதனால் தண்ணீர் அதிகம் பெறுக்குவதற்கு வாய்ப்பு இல்லை. அங்கே பல ஏக்கர் நிலங்கள் தண்ணீர் இல்லாமல் விளைவு குறுகி விட்டது என்று குறிப்பிட விரும்புகிறேன். தண்ணீர் இல்லாத நிலைமை யிலே அங்கு மக்கள், மிகவும் அமோகமாக மழையிருந்தும், நில புலன்களை சாகுபடி செய்வதற்கு வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஹரி ஜனங்கள் பெருவாரியாக வாழும் மேட்டுப் பிரதேசமான தேன் பொத்தை என்ற இடத்தில் 60 அடிக்கும் கீழ் தான் குடி தண்ணீர் கிடைக் கிறது. அங்கே குடித் தண்ணீர் கிணறுகள் இல்லை. அதற்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கவேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ வசதி, ரோட்டு வசதி இவைகளைப் பொறுத்தமட்டில் இந்த பகுதி மிகவும் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்றுதான் சொல்லவேண்டும். சென்னை ராஜ்யத்துடன் சமீபகாலத்தில் சேர்ந்த பிரதேசங்களை பிரத்தியேக மாக அரசாங்கம் கவனிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. செங்கோட் டைத் தாலூக்காவில் சாம்பவர்வடகரை என்று ஒரு கிராம பஞ்சாயத்து இருக்கிறது. அதற்கு அருகாமையில் சுந்திரபாண்டியபுரம் பஞ்சாயத்து இருக்கிறது. இதற்கு மத்தியில் ஒரு மைல் தூரம்தான் உண்டு. ஆனால் பாதை கிடையாது. ஒரு மைல் தூரத்தில் உள்ள ஊரை அடைவதற்கு 7 மைல் சென்று, தென்காசிக்கு போய் அங்கிருந்து 5 மைலில் உள்ள சுந்திரபாண்டியபுரம் சேரவேண்டும். அதாவது 11, 12 மைல் சுற்றித்தான் அந்தப் பக்கத்திலுள்ள கிராமத்திற்கு போக வேண்டியிருக்கிறது. ஒன்று செங்கோட்டைத் தாலூக்காவில் உள்ளது, மற்றது தென்காசி தாலூக்காவில் திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கிறது. ஆகையால் இன்றைக்கு இரண்டும் கெட்ட நிலைமையில் இருக்கிறது. ஆகவே இதற்கு ஒரு திட்டம் அமைத்து ரோடுகளை ஆங்காங்கே போட ஏற்பாடு செய்யவேண்டும். அவசியமான இடங்களில் சிறு பாலங்களைக் கட்டி இந்த ரோட்டு வசதிகளை செய்து கொடுத்து அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு தொடர்பு ஏற்படுத்தவேண்டும். இந்த பகுதியை பிரத்தியேகமாக சீர்திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். தென்காசியிலிருந்து கொல்லம் போகும் ரோடு ஒன்று இருக்கிறது. இது முக்கியமான ரோடு. செங்கோட்டை நகரத்திலிருந்து 11½ மைலிலே கேரள எல்லை இருக்கிறது. இந்த ரோடு பல வருடங்களாக செப்பனிடப் படவே இல்லை. இது திருவாங்கூர்-கொச்சி ஆட்சியில் இருந்தபோது இது தமிழ் நாட்டுடன் சேரும் என்ற காரணத்தால் அவர்கள் இதை உதாசீனம் செய்துவிட்டார்கள். இப்போது எஞ்சி இருக்கும் கேரளப் பகுதிக்கு சுமார் 44 மைல் தார் ரோட் அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் பழைய பகுதிக்கு எந்தவிதமான ரோடு மராமத்தும் செய்யப்படவில்லை. ஆகவே சர்க்கார் இதை உடனடியாக சீர்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கன்னியாகுமரிப் பகுதியில் முக்கியமான தொழில் பனைமரத் தொழில். பனைமரத்தில் ஏறி இறங்கி வேலை செய்து ஆங்காங்கே கருப்பட்டி செய்து ஜீவனம் நடத்திவருகிறார்கள். அங்கே பல கூட்டுறவு சங்கங்கள் அமைத்து அதன் மூலமாக பனைவெல்லம் தயாரித்து சுத்தம் செய்து நல்ல முறையில் விற்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் அது சர்க்கரை மில் லோடு போட்டிப்போடக் கூடிய நிலைமையில் இல்லை. ஆகவே அவர்களுக்கு சர்க்கார் மான்யம் கொடுத்தால் மாத்திரம்தான் அந்தத் தொழிலை வெற்றிகரமாக நடத்தமுடியும். இதை நேரில் பார்த்தால் ஆலை சக்க ரையை விட இது நல்ல முறையிலே அவர்கள் தயாரித்திருப்பது புலனாகும். சுகாதார முறைப்படி பார்த்தால் இதில் சிறந்த உணவு சத்து அதிகம்

16th November 1957] [Sri K. Sattanatha Karayalar]

இருக்கிறது என்பது புலனுகும். அப்படியிருந்தும் மற்ற சர்க்கரையை விட பவுண்டுக்கு 1½ அணு அதிகமாக விலையாவதால் இப்பொருள் செலவாகவில்லை. மதுவிலக்கு வந்த பிறகு பெருவாரியான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் இந்தத் தொழிலுக்கு சப்சிடி கொடுத்துதவவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் இந்த பாம்கர் சொசைடிகள் கூடிய சீக்கிரத்திலே அடைக்கப்பட்டு விடும்படியான நிலைமை ஏற்படும். முன்பு திருவிதாங்கூர்-கொச்சியில் இருந்து இலவசமாக விறகு கொடுத்துக்கொண்டிருந்தார்கள். ஒரு டன் விறகு 35 ரூபாய்க்குக் விற்கும் போது சுமார் 7½ ரூபாய்க்கு கொடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே அன்று இந்த சொஸைடிகள் வெற்றிகரமாக நடந்து கொண்டிருந்தன. ஆகையால் நமது சர்க்கார் அங்குள்ள காடுகளில் இருந்து இலவசமாக விறகு எடுத்துக்கொள்வதற்கோ அல்லது குறைந்த விலைக்கு விறகுகளை சப்ளை செய்வதற்கோ ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் சப்சிடி அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த வட்டாரத்தில் மலை இருக்கிறது. இரண்டாயிரம், மூன்ருயிரம் அடி உயரம் இருக்கும். நல்ல சந்தன மரங்கள் இங்கு வளர்க்க முடியும். சந்தன மரங்கள் மீது பறவைகள் உட்கார்ந்து அதன் பழத்தைத் தின்று அந்தக் கொட்டையை உமிழ்வதனுல் ஆங்காங்கே சந்தன மரங்கள் உண்டாகின்றன என்று கனம் அமைச்சர் அவர்களும் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில் கூறினுர். கேரள நாட்டிலே மரங்கள் வைத்து வளர்க்கிருர்கள். குறிப்பாக குற்ருலம் போன்ற இடங்களில் சந்தன மரங்கள் வைத்து வளர்ந்திருப்பதை பார்த்திருக்கக்கூடும். அங்கே இந்த மரங்கள் வளர்ப்பதற்குள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆயிரம் அடி உயரம் உள்ள மலைச்சரிவுகளில் மிகவும் செழிப்பான பகுதிகள் பல இருக்கின்றன. அங்கே சந்தன மரங்கள் வளரக் கூடும். தனிப்பட்ட முதலாளிகள் கையிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. கூடிய சீக்கிரத்திலே விரிவான நிலச் சீர்திருத்த சட்டம் வரும் என்று அந்தக் காடுகளை நிலச்சுவான்தார்கள் செம்மை படுத்தாமல் பாழாக்கி வைத்திருக்கிருர்கள். இந்தக் காடுகளை பயிரிடுவதற்கு, தனிப்பட்டவர்களின் காடுகளாக இருந்தாலும் சரி, சர்க்கார் நிலமானுலும் சரி, அந்தக் காடுகளிலெல்லாம் சந்தன மரங்களை வைத்து வளர்ப்பதற்கான திட்டங்களை வகுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக நான் திரும்பக் கூற விரும்புவது படித்துப் பட்டம் பெற்றதன் பிறகு வேலையற்று திண்டாடக்கூடிய மக்கள் இந்த பாகத்தில் அதிகமாக இருக்கிருர்கள். பெண்மணிகளே பலர் இருக்கிருர்கள். ஆசிரியர் பயிர்ச்சி படித்து முடித்த பெண்களும் பலர் இருக்கிருர்கள். இங்கிலீஷ் இ.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள் ஆசிரியர் பயிர்ச்சி பெற்றவர் பலர் இருக்கிருர்கள் என முன் கூறினேன். இ.எஸ்.எல்.ஸி. என்பது இங்குள்ள எஸ்.எஸ்.எல்.ஸி.க்கு சமம் ஆகும். இ.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள் பள்ளி உபாத்தியாயர்களாக இருக்கிருர்கள். அவர்களை மீண்டும் பயிற்சிக்கு போகும்படியாகச் சொல்லுகிருர்கள். அதாவது டிரெயினிங் பெற்றவர்கள் நீண்ட நாளாக வேலையில் இருப்பவர்கள்கூட மறு பயிற்சிக்கு அனுப்பப்படுகிருர்கள். அப்படி திரும்ப டிரெயினிங்க்கு அனுப்பப்படும் வாத்தியார்களுக்கு எந்தவிதமான சர்க்கார் உதவியும் அளிப்பதில்லை. அதற்கு காரணம் என்னவென்று பேட்டால் முன்பு இருந்த திருவிதாங்கூர்-கொச்சியில் அப்படி கொடுக்கப்கபடவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனுல் இன்று கேரளத்தில் அதை மாற்றி திரும்ப பேஸிக் ட்ரெயினிங்-க்கு தனியாக பணம் கொடுக்கிருர்கள். ஆகவே இங்கு வந்து சேர்ந்த பிறகு இங்குள்ள சலுகையும் கிடைக்காமல், அங்குள்ள சலுகையும் கிடைக்காமல் தவித்துக்கொண்டிருக்கிருர்கள், இந்த உபாத்தியாயர்கள். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கூறிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம என்பது சேர்க்கப்பட்டிருக்கிறது. அது ஒரு பாவச் செயல் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட பாவச் செயலிற்கு அதிகப்படியான பணம் அரசாங்கம் கோரியிருக்கிறது. சபையும் அதை நேற்று அனுமதித்திருக்கிறது. இந்தத் தலைமுறையில் வாழ்கிறவர்கள் இனி வருகிற 11-40 a.m.

[Sri P. S. Chinnadurai] [16th November 1957

தலைமுறையினரை வடித்தெடுப்பதற்கு என்ன உரிமையிருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மனித தத்துவ ரீதியில் பார்த்தாலும் இதைவிட பாவச் செயல் வேறு என்ன இருக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. சுமார் 30, 40 வருடங்களுக்கு முன்னால் நம் பெற்றோர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அனுசரித்திருந்தால் நம்மில் பலரும் இன்று இங்கு இருந்துகொண்டிருக்க முடியாது என்பதை நான் உணருகிறேன். இன்றுள்ள உணவுத் தட்டுப்பாடு அல்லது இதர தொல்லைகள் நமக்கு இருந்தபோதிலும் அவைகளை எதிர்த்து சரியானபடி சமாளித்து வெற்றி காண்பதற்கு பதிலாக தவறான பாதையில் போய் நாம் பிரச்னையை தீர்த்துக் கொள்ள முற்படுகிறோமோ என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. இதைப்பற்றி பல கருத்துக்கள் நாட்டில் இன்று நிலவுகிறது. ஒரே கட்சியை சார்ந்தவர்களாக இருந்தபோதிலும் கருத்து வேறுபாடு உள்ளவர்களாக விளங்குகிறார்கள். இந்த நேரத்தில் இம்மாதிரியான ஒரு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு அதிக ஆதரவு நாம் கொடுக்காது இருப்பது ஒன்றுதான் மனித ரீதிக்கு நன்கு உகந்ததாகயிருக்கும் என்று நான் சுட்டிக்காட்டி வற்புறுத்த விரும்புகிறேன். இதில் அதிகப்படியான உற்சாகம் காட்டப்படுகிறது என்பதாலேயே பள்ளிகளில் கூட இந்தப் பாடங்களைப் போதிக்கச் செய்வதற்கு ஆங்காங்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. வீடு வீடாகச் சென்று இதற்கு அதி தீவீரமான பிரசாரம் இதில் செய்யப்படுவதற்கு பலவிதமான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பதாலேயே நான் இதை இங்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பாவச் செயலை ஊக்குவிக்காமல் இருக்கவேண்டும். முடியுமானால் இந்தப் பாவச் செயலை அடியோடு அகற்றுவதற்கு நாம் தயாராயிருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த பொது தேர்தல் முடிந்த பின்னர் இந்த ராஜ்யத்திலுள்ள முதலாளிகள் மீண்டும் தங்கள் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். பொது தேர்தலிற்கு முன்னால் எல்லாம் தொழில் தகராறுகளை நேரடியாகப் பேசி உடன்பாடு காண முன் வந்த முதலாளிகள் இப்பொழுது, தேர்தல் முடிந்த பிற்பாடு இந்த மந்திரிசபை அமைத்த பிறகு நேரடி பேச்சு வார்த்தைக்கு இணங்க மறுக்கிறார்கள். பொது தேர்தலுக்கு முன்னால் மிகப் பெரிய பிரச்னைகளைக் கூட நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்வு காண முன் வந்த முதலாளிகள் தேர்தல் முடிந்ததற்குப் பிற்பாடு அன்றாடம் உள்ள பிரச்னைகளைக்கூட, அவைகளில் தீர்வுகாண கோர்ட்டிற்கு போக ஆர்வம் காட்டுகிறார்கள். இதற்கு காரணம் என்னவென்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நேரடியாக பேசி பிரச்னைகளை தீர்த்துக் கொள்ளவேண்டும். தொழில் தகராறுகளைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்று எல்லாப் பகுதிகளிலும் உள்ள அரசியல் வாதிகள் சொல்லி வருகிற நேரத்திலே, இந்த நாட்டின் பிரதம மந்திரியாக விளங்கும் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களே தொழில் தகராறுகளை, கோர்ட்டிற்குச் செல்லாமல் நேரில் பேசி பைசல் செய்து கொள்ளுங்கள் என்று அண்மையில் அறிவித்திருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில், சிறிய பிரச்னைகளாய் இருந்தபோதிலும்கூட கோர்ட்டிற்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணம் என் முதலாளிகளுக்கு வருகிறது. இந்தத் துணிவு அவர்களுக்கு எங்கிருந்து பிறக்கிறது ? இந்தத் துணிவு அவர்களுக்கு அரசாங்கத்தின் பக்கத்தில் இருந்து வருகிறது என்று தெரிவதால் இதை உடனே கிள்ளி எறிந்துவிட வேண்டும். நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்னைகளைத் தீர்க்கவேண்டுமென்று அரசாங்கம் முதலாளிகளை வற்புறுத்த வேண்டும், அது மிகவும் அவசியமாகும் என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கோர்ட்டுகள் அளித்த தீர்ப்புகள் அமுலாக்கப்படுவதில்லை என்ற குறை வெகு நாட்களாகவே இருந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் கோவைக்குப் பக்கத்தில், தொழிலாளர் கோர்ட் தீர்ப்பு இன்னும் அமுலாக்கப்படவில்லை என்று இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் அங்கு தொழிலாளர்கள் தங்கள் ஆட்சேபணையைத் தெரிவிக்க, முதலாளிகள் தீர்ப்பை அமுலாக்கவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்து, ஊர்வலமும் ஆர்பாட்டமும் நடத்தியிருக்கிறார்கள். இவைகளெல்லாம் அவசியமற்றது என்பதை நான் உணர்கிறேன். ஊர்வலமும், ஆர்பாட்டங்களும் காலத்திற்கு உகந்தது என்று என்னால் பூர்ணமாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அதை ஒப்புக்கொள்கிறேன். இந்த நிலை ஏன் ஏற்படுகிறது ? இதை ஏன் அரசாங்கம் அனுமதிக்கிறது ?

அந்தத் தீர்ப்புகளை அமுலிற்குக் கொண்டுவர என் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லை. அப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள தவறுவதால், முதலாளிகள் அந்தத் தீர்ப்புகளை அமுலிற்குக் கொண்டுவர மறுப்பதால்தானே ஆர்பாட்டம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே தொழில் அமைதி வேண்டுமென்று கருதினுல் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட தீர்ப்புகளை உடனடி அமுலாக்க ஏற்பாட்டு செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். நமது ராஜ்யத்தில் மாத்திரமல்ல. இந்தியா முழுவதிலும் இன்றையதினம் மிகவும் செழிப்பாக வளருகிற ஒரு தொழிலாக, ஜீவனுள்ள தொழிலாக விளங்குவது பஞ்சாலைத் தொழில். அதில் நஷ்டம் வருகிறது என்று காரணம் காட்டி இன்றையதினம் இரண்டு ஆலைகள் மூடப்பட்டிருக்கிறது. ராஜபாளையத்தில் உள்ள ஷண்முகர் ஆலையும், சென்னை நகரில் உள்ள பழைய சூளையில், இப்பொழுது எட்வேர்ட் மில் என்று சொல்லப்படும் மில்லும், நஷ்டம் ஏற்படுகிறது என்று காரணம் காட்டி மூடியிருக்கிருர்கள். பஞ்சாலை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களைப் பார்த்தால் தெரியும், அதில் நஷ்டம் வராதென்று. அப்படி, பஞ்சாலைத் தொழிலில் நஷ்டம் வருகிறது என்றுல் அதற்குக் காரணம், மிஸ் மானேஜ்மெண்ட் என்று சொல்வார்களே, நிர்வாகம் செய்ய இயலாதவர்கள், தவருக நிர்வாகம் செய்யக்கூடியவர்கள், நிர்வாகத் திறமையற்றவர்கள் கைகளில் இது இருப்பதால்தான் நஷ்டம் வருகிறது, என்று கூறப்படுகிறது. அதனுல் தொழிலாளர்கள் வேலை இழப்பதோடு நம் நாட்டிற்குத் தேவையான உடை உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. இந்த நிலைமையை நாம் அனுமதிக்கக் கூடாது. ஒன்றுதானே, இரண்டுதானே என்று விட்டு விடக் கூடாது. ஒன்றுக இருந்தபோதிலும், இரண்டாக இருந்தபோதிலும் ஒரு கஜம் துணி குறைந்தால்கூட அது நம் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்ற உணர்வு நமக்கு இருக்க வேண்டும். ஆகவே, முதலாளிகளின் இத்தகைய மனுேபாவத்தை, திறமையற்ற முதலாளிகளின் மனுேபாவத்தை மாற்ற வேண்டும். இல்லையென்றுல் அதற்குத் தகுந்த மாற்று நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். உணவு சம்பந்தமான பிரச்னையை நாம் ஏற்கனவே இந்த சபையில் விரிவாக விவாதித்திருக்கிறோம். ஆனுல் ஒன்று நான் இங்கு குறிப்பிட வேண்டும். உணவுப் பிரச்னை என்று வந்தால், நிலப் பிரச்னை வரும், நிலப் பிரச்னை வந்தால் தண்ணீர் பிரச்னை வந்து விடும். நான் புதிதாக ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். புதிதல்ல, எல்லோருக்கும் தெரிந்ததுதான். உணவில் முக்கியமானது மீன், இந்த மீன் அபிவிருத்தியில் நாம் அதிக நாட்டம் செலுத்தினுல் உணவுத் தட்டுபாடு ஏற்படுவதை பெருமளவிற்கு நாம் தீர்த்துக்கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன். இந்த நாட்டிலே உணவுத்தட்டுப்பாடு, யுத்த காலத்தில் ஏற்பட்டபோது மஹாத்மா காந்தியடிகள்கூடச் சொன்னுர்கள். மஹாத்மா காந்தியடிகள் மீன் உணவு உட்கொள்வாரா இல்லையா என்பதல்ல பிரச்னை. உணவுத் தட்டுப்பாடைக் குறைக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிய போது அவர்கள் சொன்னது என் நினைவிற்கு வருகிறது. ராணுவத்தினர் என்ன செய்கிருர்கள், கடற்படையினர் என்ன செய்கிருர்கள், நம் நாட்டைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் கடல் இருக்கிறதே, அங்கிருந்து மீன்களைக் கொண்டு வந்து நாட்டில் தள்ளட்டும், அப்பொழுது இங்குள்ள உணவுத்தட்டுப்பாடு குறையும் என்று காந்தியடிகள் சொன்னுர்கள். **(The Hon Sri C. Subramaniam** அது பாவமல்லவா ?) அதை, பாவமென்று நான் கருதவில்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு வெஜிட்டேரியன் என்று சொல்லிக்கொள்ளவில்லை. என்னை நாண்-வெஜிட்டேரியன் என்று சொல்லிக்கொள்ள நான் பெருமைப் படுகிறேன். அது ஒரு பாவச் செயல் என்று நான் கருதவில்லை. நம் ராஜ்யத்திற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. நம் ராஜ்யத்தில் கடற்கரையோரப் பகுதிகள் ஏராளமாக இருக்கின்றன. அப்பகுதிகளில் நாம் சரியானபடி கவனம் செலுத்தினுல் மீன் வளர்ச்சியை நம்மால் அதிகப்படுத்த முடியும். ஆகவே அதில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று நான் சொல்வேன். பல லட்சக் கணக்கான ரூபாய்கள் இதற்காக ஒதுக்கப்படுவதாக அறிகிறேன். ஆனுல் இதில் சில தனிப்பட்ட நபர்கள் லாபம் அடைந்து விடுகிருர்கள். ஆகவே இதில் கவனம் செலுத்தி மீன்

[Sri P. S. Chinnadurai] [16th November 1957

தொழிலில் ஈடுபட்டு இருக்கின்றவர்களுக்கு மாத்திரம் போய் சேரும்படியாக இதை கூட்டுறவு ஸொஸைட்டி ஏற்படுத்தி அதன் மூலமாக அவர்களுக்கு உதவி அளித்து அவர்களை நல்ல நிலைமைக்கு கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக ஜமீன் ஒழிப்பு சட்டத்தின் மூலம் எந்தெந்த நிலங்களை எங்கெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறோமோ அவைகளை எல்லாம் அந்தந்த இடங்களில் சரியான முறையில் நிலவரி கொள்கை அடிப்படையில் கொடுக்கப்படவில்லை, என்பதை மீண்டும் அரசாங்கத்திற்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே மாதிரிதான் கிராம நிலங்களிலும் வெவ்வேறு வகையில் இருக்கின்ற நிலவரி கொள்கை பல பகுதிகளில் இருந்து வருவதால் விவசாயிகளும் பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாகி கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ரயத்வாரி செட்டில்மெண்ட் இது வரையிலும் தீராமல் இருப்பதினால் இன்று விவசாயிகள் எல்லாம் மிகவும் மனம் வருந்தி இருக்கிறார்கள் என்பதை சொல்ல ஆசைப்படுகிறேன். ரயத்வாரி செட்டில்மெண்ட் வருவது வரையிலும் காத்திராமல் அந்த நிலங்களுக்கு எவ்விதம் நிலவரி போடப்பட்டிருக்கின்றதோ அவைகளையே இவற்றிற்கும் போடுமாறு வேண்டிக்கொள்கிறேன். இவ்விதம் இவர்களுடைய குறைகளை கவனிக்காமல் இருப்பதினால் பலவிதமான துன்பங்கள் அவர்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. புறம்போக்கு நிலங்கள் சம்பந்தமாக ஒரு வார்த்தை. புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்து கொடுப்பதில் அரசாங்கம் மிகுந்த தயக்கம் காட்டி வருகிறது என்பது என் அபிப்பிராயம். அரசாங்கம் ஜாரி செய்து கொடுக்காமல் தங்கள் கையிலே அதிகமாக வைத்துக்கொண்டிருக்கிறது என்பதுதான் என் அபிப்பிராயம். பணக்காரன் எப்படி தன் பணத்தை கருமித்தனமாக கையில் வைத்துக்கொண்டு தனக்கு உதவாமல் பிறருக்கும் உதவாமல் வைத்துக்கொண்டு இருப்பானோ அதே மாதிரியுள்ள மனோபாவத்தில் இந்த சர்க்காரும் வைத்துக்கொண்டிருக்கிறது. வேண்டுமென்றால் இந்த நிலங்களை எல்லாம் பூமிதானத்தின்கீழ் கொடுத்து அவற்றின் மூலமாக நிலமில்லாத விவசாயிகளிக்கு கொடுக்க ஏற்பாடுகளை உடனடி சர்க்கார் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல. நிலங்களை கொடுப்பது மாத்திரமல்ல, அவர்களுக்கு கொடுத்த நிலங்கள் எல்லாம் ஜாரி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த கருத்துக்களை வற்புறுத்திக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Deputy Speaker, Sir, many hon. Members have spoken on this Appropriation Bill, and many of them have given very valuable suggestions. I do not know how far these suggestions will be implemented. Even during the budget debate and on many other occasions, hon. Members have spoken about so many things, but we invariably find that many of the suggestions have not been implemented. If we go through the report of the Committee on Assurances, we find in many respects it is very disappointing. Though it may not be very appropriate to dilate at length or repeat over and over again the working of the several departments, still I would request Hon. Ministers to give effect to those suggestions as early as possible and see that something is done to improve the lot of the masses at large. This is my humble suggestion.

Even yesterday many suggestions were given during the discussion of the supplementary estimates. To-day I do not propose to reiterate them. My humble suggestion will be to request Government to concentrate their attention on two or three important matters. First they should provide irrigation facilities to the ryots with a view to stepping up food production. To improve food production, we should provide the ryots with all

facilities like manure, pesticides, etc. We should give them subsidies for digging wells. As regards irrigation, almost all projects are nearing completion in our State, and we have to pay our attention now to dry areas. We have to tap sources like the Palar waters and think of sinking more wells by giving more subsidy, especially to small ryots, and thereby step up production.

As regards education, though we have been doing a lot, still what has been done is quite inadequate, and we have yet to do much more. For this purpose, we had the White Paper on Education before us. A committee was constituted to go into the whole question.

In regard to public health, I have to say that more attention should be paid to public health and 'Medical'. The headquarters hospital are under-staffed. Medicines are a rare commodity.

We do not find an adequate number of post-graduate students to tackle many problems. To overcome this difficulty, what is it that the Government should do? They must send more students for post-graduate training abroad. As far as possible they must try to see that these students are posted to headquarters' hospitals with a view to relieving the congestion in Madras City. This is a very important matter, which the Government should take up immediately in all seriousness.

(Mr. Speaker in the Chair.)

I understand that in the recent advertisement by the Public Service Commission for 240 vacancies, only 130 men had applied. I do not know how many of them will be taken up. So the cry of the hour is that the pay offered is not attractive. The Government must see that so far as this department is concerned they attract more men by giving them more pay. To Agriculture and Animal Husbandry Departments also, the Government must pay immediate attention. In regard to the starting of National Extension Schemes and Community Projects, I would like to make one submission. It is not known on what basis these areas are selected. The Government should concentrate their attention on the selection of undeveloped and under-developed areas in the districts. Party politics should not play an important part in this. They must call for an impartial report from the Collectors and see that these under-developed areas are taken up at once and they must try to see that these areas are given all facilities as early as possible.

Now, lastly, coming to the question of Audit, I need not say that under the Constitution, especially in the present-day democratic set-up, three important factors are necessary, viz., the Audit, an impartial Public Service Commission and a Judiciary. While we have got nothing to say about the Judiciary and the Public Service Commission, I would like the Hon. the Minister for Education and Finance to take up the question of toning up the administration of the Finance Department. As early as possible, he should take steps to create a separate cadre of auditors, train some class of people and post them to all the departments so that

they may be independent of the departments. Now, we find that selections are made from the departmental people with the result that the audit is not very effective. My submission is that auditors should be sent out the Finance Department for checking up stores and for auditing the accounts of the different departments. They should be under the control of the Finance Department. Now, I am told that the promotions are also not made on satisfactory lines. Still, we are taking people from the Accountant-General's Office, and it is not known why it should be so. By having the Government of India servants here, we not only pay them more, but also do not give adequate chances to our departmental servants. That should not be the case. So, I would request the Hon. Finance Minister to arrange to train more officers, give them some attractive pay if possible and make them independent so that there may be a strong Audit section and the administration may run on efficient lines.

As for the submission of reports on audit objections, I wish to point out that there is considerable delay. Under some pretext or other, the departmental officers are not taking early action. I do not know the reason for this delay. As a result of the delay so caused, the work of the Public Accounts Committee is hampered to a great extent. I do not say that it will be possible to submit the last year's account immediately. As it is, we have passed only the accounts relating to 1954–55. It should be possible for the Government to see that these audit objections are cleared as early as possible and the report are submitted in time. This is a very important matter and I request the Hon. Minister to look into it.

Sir, I think there is no need to talk much on the Appropriation Bill. We have already given our suggestions. I hope the Hon. the Minister for Education will concentrate his attention to the various suggestions that I have made and see that something is done as early as possible. That is my only submission on this occasion. Thank you, Sir.

12-05 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே இந்த சபைமுன் இருக்கக்கூடியது நிதி ஒதுக்கல் மசோதா. அதைப் பற்றி ஆட்சேபணை சொல்லக்கூடிய முறையில் யாரும் பேசவில்லை. ஆகை யால், இந்த மசோதாவைப்பற்றி அதிகமாகப் பேசவேண்டிய அவசியம் இல்லை என்று நான் நினைக்கிறேன். சில விஷயங்கள் குறிப்பிடப்பட்டன. அவைகளைப்பற்றி மட்டும் சில வார்த்தைகள் சொல்வது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அதிலும் முக்கியமாக குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி கனம் சின்னதுரை அவர்கள் பேசினார்கள். அது பாவமான செய்கை என்பதைப்பற்றியும் அவருடைய கருத்தைத் தெரிவித்து அதற்குப் பரிகாரம் எடுத்துச் சொன் வர்கள். நாம் இன்றைக்கு முடிவு செய்ய வேண்டியது—குழந்தைகள் வருமல் தடுப்பது பாவமா ? அல்லது குழந்தைகளைப் பெற்று, அவர் களுக்குப் பால் இல்லாமல், உணவு இல்லாமல், போதிய உடை இல்லாமல், போதிய கல்வி இல்லாமல், மனித ரூபத்திலே மிருக வாழ்க்கை நடத்தக் கூடிய முறையிலே அவர்களை வளர்ப்பது பாவமா ? அது பாவமா இது பாவமா என்றுதான் இன்றைக்கு நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். அப்படி யோசித்துப் பார்க்கும்போது, பாவம், பாவம் இல்லை என்பதற்கு ஒரு நல்ல முடிவு காண முடியும் என்று நான் நினைக்கிறேன்.

16th November 1957] [Sri C. Subramaniam]

இன்றைக்கு நம்முடைய நாடு இருக்கும் பொருளாதார நிலைமையில், இப்பொழுது இருக்கக்கூடிய மக்களுடைய தொகைக்கே போதுமான அளவு உணவும், உடையும், வீட்டு வசதியும், கல்வி வசதியும், சுகாதார வசதியும் அளிக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம். திட்டம் போட்டு பல காரியங்கள் செய்ய வேண்டும் என்று நாம் முயற்சிசெய்தாலும்கூட, இப்பொழுது நாம் முன்னேற்றம் அடையக் கூடிய வேகம் ஜனத்தொகையினுடைய அதிகரிப்பு வேகத்தைப் பிடிக்க முடியாத நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகையால்தான், இதை ஒரு பிரச்னையாக எடுத்து, இதிலே என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி நாம் ஒரு முடிவுகாண வேண்டியதாக இருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி மகாத்மா காந்தியடிகள்கூட தவறுகச் சொல்லவில்லை. அந்தக் கட்டுப்பாடு எந்த விதத்தில் இருக்க வேண்டும் என்பதைப்பற்றி அவர்கள் கூறும்போது, வேறு வழியை அனுசரிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் யாருக்கும் எந்த விதமான அபிப்பிராய பேதமும் இல்லை. ஆனால். அதற்கு அனுசரிக்கக்கூடிய முறை என்ன என்பதைப்பற்றித்தான் சிற்சில இடங்களில் அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன.

கனம் சின்னதுரை அவர்கள் இன்னொரு யோசனை சொன்னார்கள்—மீன் போன்ற சத்துள்ள உணவை மக்கள் அதிகமாகச் சாப்பிட வேண்டுமென்று. அதிலேகூட அபிப்பிராய பேதம் இருக்கிறது. இம்மாதக் கடைசியில் சைவ உணவு மகாநாடு, அதாவது காய்கறி உணவு மகாநாடு ஒன்று நடக்கப் போகிறது. இறைச்சி சாப்பிடுவது, மீன் சாப்பிடுவது பாவம் என்று அவர்கள் ஒரு சமயம் கருதலாம். இப்படி 'பாவம்' என்று சொல்கிறதையெல்லாம் இம்மாதிரி இருக்கக்கூடியதை ஒதுக்கிக்கொண்டே போனால், ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே போகும். அப்படி ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே போகும்போது, இறைச்சி, மீன் போன்றவைகளையும் ஒதுக்கிவிட வேண்டுமென்று ஒரு சாரார் சொல்லிக்கொண்டிருந்தால், அப்பொழுது மக்கள் எதைச் சாப்பிட்டு வாழ்வது என்ற பிரச்னை தான் ஏற்படும். ஆகையால், இதைப்பற்றி ஒரு முடிவு செய்யும்போது இவைகளை யெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு முடிவு செய்யவேண்டியதாக இருக்கிறதென்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நிர்வாகம் நல்ல முறையிலே நடைபெறுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று யோசனைகள் சொன்னார்கள். அந்த விஷயத்தில் சர்க்கார் அதனலான முயற்சிகளைச் செய்து வருகிறது. ஆகையால், அந்த முயற்சிகள், எங்களுக்குத் தெரிந்த அளவிலே, எங்களுக்கிருக்கும் திறமை அளவிலே, எடுத்து வருகிறோம். திறமை போதாது என்றால் அது வேறு விஷயம். நாங்கள் முயற்சியே எடுக்கவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஆகையால், இன்றைக்கிருக்கும் நிலைமையில் எங்களுக்குத் தெரிந்த அளவில், எங்களுக்கு இருக்கும் திறமை அளவிலே, இந்த நிர்வாகத்தை நல்ல முறையிலே அமைப்பதற்கு, அதிலே இருக்கும் குற்றங்குறைகளை நீக்குவதற்கு, எங்களாலான முயற்சிகளைச் செய்து வருகிறோம். அந்த முயற்சி வெற்றிபெறுவதற்கு இந்த சபையும் முழு மனதுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல விஷயங்களைப்பற்றி பல யோசனைகளை அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். பல அங்கத்தினர்கள் பேசுவதை நான் கவனித்தபொழுது, இது என்ன பொது பட்ஜெட் விவாதம் நடக்கிறதா என்று ஒரு ஐயப்பாடுகூட என்னுடைய மனதில் எழுந்தது. ஆனால் அங்கத்தினர்கள் தங்களுக்குத் தெரிந்ததை எடுத்துச் சொல்லி, எப்படியாவது நிர்வாகம் சரியாக நடைபெற வேண்டும், குறைகளை, கஷ்டங்களை நீக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு பேசியிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். ஆகையால் அவைகள் எல்லாவற்றிற்கும் இந்த விவாதத்தில் பதில் சொல்லுவது அவ்வளவு பொறுத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன். ஆகையினால் இந்த விவாதத்தில் அங்கத்தினர்கள் எடுத்துக்கூறிய அரிய யோசனைகளை யெல்லாம் அந்தந்த இலாகாவும், சம்பந்தப்பட்ட மந்திரிகளும் நல்ல முறையிலே பரிசீலனை

முறைய

[Sri C. Subramaniam] [16th November 1957

செய்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள் என்றே நம்புகிறேன். ஆகவே, இப்பொழுது நம் முன்னால் இருக்கக்கூடிய இந்த மசோதாவை நிறைவேற்றிக்கொடுத்து, நிர்வாகம் நல்ல முறையிலே நடப்பதற்கு அங்கத்தினர்களும் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பிரேரேபணையை ஆதரிக்குமாறு கோருகிறேன்.

MR. SPEAKER : The question is—

" That the Madras Appropriation (No. 3) Bill, 1957, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2, the Schedule, Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : I move—

" That the Madras Appropriation (No. 3) Bill, 1957, be passed."

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Appropriation (No. 3) Bill, 1957, be passed."

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இன்னும் சிறிது நேரத்தில் இந்த மசோதா சட்டமாகிவிடப்போகிறது. ரூ. 77,41,300 அதிகமாக செலவழிப்பதற்கு அதிகாரத்தை சர்க்காருக்கு நாம் கொடுக்கிறோம். இது பெரும்பாலும் புது திட்டங்களின் அடிப்படையில் செலவு செய்யப்படும். இதற்கு சமமாக மற்ற இனங்களில் எவ்வளவு சிக்கனம் செய்யமுடியுமோ, அவ்வளவு சிக்கனம் செய்வது மிகவும் அவசியமாகிறது. ஏனென்றால் நம்முடைய பட்ஜெட் பற்றுக்குறை பட்ஜெட் நிதிக் கமிஷன் அறிக்கையை பார்த்தபிறகும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அவ்வளவு சந்தோஷப்பட்டிருக்க மாட்டார்கள் என்று எதிர் பார்க்கிறேன். மற்ற ராஜ்ய நிதி மந்திரிகளும் ஏமாற்றத்தைத்தான் வெளியிட்டிருக்கிறார்கள். ஏதோ முன் இருந்த நிலைமைக்கு சிறிது அபிவிருத்தி இருந்தாலும்கூட இன்னும் நம்முடைய ரெவின்யூ பட்ஜெட்டை சரிகட்டும் அளவிற்கு நம்முடைய வருமானத்திற்கு திட்டங்கள் இல்லை என்பது நிச்சயமாகச் சொல்ல முடியும். அப்படியிருக்கும்பொழுது, ஒரு பைசா கூட அனாவசியமாக செலவழிக்கக்கூடாது. அனாவசியச் செலவை கவனித்து சிக்கனப்படுத்துவது ஒரு பெரிய இயக்கமாக வளரவேண்டும். அந்த அர்த்தத்தில் எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பை மந்திரி அவர்கள் கோரியிருந்தால், அந்த ஒத்துழைப்பு ஏராளமாக இருக்கும். ஒத்துழைப்பு பெறுவதிலே வேண்டுமானால் ஏதாவது சங்கடங்கள் ஏற்படலாமே தவிர, ஒத்துழைப்பு அளிப்பதிலே சங்கடம் ஏற்படாது என்று நான் அவர்களுக்கு உறுதி கூறுகிறேன்.

லஞ்சத்தை ஒழிப்பதும், சிக்கனத்தை ஏற்படுத்துவதும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையதுதான். இதுபற்றி சபையில் பேசும்பொழுது சில உத்தியோகஸ்தர்களைப்பற்றி பேசியிருக்கலாம். அதனால் தனிப்பட்ட அதிகாரிகளை இழிவுபடுத்தவேண்டுமென்ற நோக்கம் யாருக்கும் கிடையாது. அப்படி தனிப்பட்ட அதிகாரிகளை இழிவுபடுத்துவதில் யாருக்கும் லாபம் கிடையாது. பொதுவாக லஞ்சத்திற்கு எதிராக சட்ட சபை இருக்கிறது, பொது மக்களுடைய கவனம் இருக்கிறது, மந்திரிசபை இருக்கிறது என்று நிர்வாக அதிகாரிகள் உணரவேண்டும். அந்த உணர்வு வந்தால்தான் மேலிருந்து கீழ் வரையிலும் லஞ்சத்தை ஒழிக்க முடியும். அந்த முறையில் குறிப்பிட்டதில் ஒன்றுதான் முன்னாள் ஐ.ஜி. ஆப் போலீஸ் ஸ்ரீ ராஜரத்தினத்தைப் பற்றி பேசியது. அது சம்பந்தப்பட்ட விஷயத்தை நான் இந்த சமயத்தில் ஆராய்வதற்கு விரும்பவில்லை. ஏதோ அதைப்பற்றி விசாரணை நடந்துவிட்டது. சம்பந்தப்பட்டவர்களுக்கு திருப்தி அளித்தோ இல்லையோ, அந்த அதிகாரிக்கே திருப்தி அளித்ததோ இல்லையோ, மந்திரி சபைக்கு திருப்தி

அளித்ததோ இல்லேயோ, எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு திருப்தி அளித்ததோ இல்லேயோ, விசாரணே முடிவடைந்துவிட்டது. அதுபற்றி பல பேர்களுக்கு பல விதமான கருத்துகள் தோன்றியிருக்கின்றன. அவரைப்பற்றி குறிப்பிட்டது ஒரு கெட்ட எண்ணத்தோடு குறிப்பிடவில்லே. ஒரு நல்ல எண்ணத்தோடுதான் அவரைப்பற்றி குறிப்பிடப்பட்டது.

Mr. SPEAKER : " அப்ரோப்ரியேஷன் பில் 3-வது ரீடிங்கில் " இந்த விஷயத்தைப்பற்றி பேசுவது பொறுத்தமல்ல.

Sri M. KALYANASUNDARAM : செலவுக்கு பணத்தை ஒதுக்கும்பொழுது, அதை எப்படி சிக்கனமாக செலவழிக்கவேண்டுமென்பதற்கு நான் சில யோசனேகள் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இதிலே இந்த விஷயம் வருகிறது.

Mr. SPEAKER : இருந்தாலும், அப்ரோப்ரியேஷன் பில் ஷெட்யூலில் உள்ள விஷயங்களேப்பற்றித்தான் இந்த சமயத்தில் பேசவேண்டுமே தவிர மற்ற விஷயங்களேப்பற்றி பேசுவது நல்லதில்லே.

Sri K. VINAYAKAM : நல்லது இல்லே என்பது மட்டுமல்ல, அப்படிப் பேசுவது முறையே இல்லே.

Mr. SPEAKER : Hon. member may get a chance for giving rulings.

Sri M. KALYANASUNDARAM : முறையைப்பற்றி ஸ்ரீ விநாயகம் அவர்களிடமிருந்து நான் கற்றுக்கொள்ளத் தயாராக இல்லே. சபாநாயகர் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

Mr. SPEAKER : நான் இப்பொழுதுதான் சொன்னேன், இப்பொழுது ரூலிங் கொடுக்கவேண்டியவர் நான் தான், அவர்களுக்கு சந்தர்ப்பம் வரும்பொழுது அவர்கள் ரூலிங் கொடுக்கலாம், என்று.

Sri M. KALYANASUNDARAM : சென்ற ஐ.ஜி. ஆப் போலீஸ் நிர்வாக காலத்தில் நடந்த காரியங்களே சர்க்காராவது பரிசீலனே செய்ய வேண்டும். தவருக சிலரை மேல் பதவியிலிருந்து கீழ் பதவிக்கு இறக்கியிருக்கலாம். சில அதிகாரிகளே கீழ்ப் பதவியிலிருந்து மேல் பதவிக்கு உயர்த்தியிருக்கலாம். இன்னும் சில காண்டிராக்ட்கள் அவர் காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளேப் பற்றி பலவித புகார்கள், வதந்திகள் இருக்கின்றன. இப்பொழுது விசாரணே நடத்தவேண்டுமென்று நான் சொல்லவில்லே. அவைகளே சர்க்காராவது பரிசீலனே செய்து பார்க்கவேண்டுமென்று தான் சொல்லுகிறேன்.........

Mr. SPEAKER : மறுபடியும் கனம் அங்கத்தினர் அந்த விஷயத்தைப் பற்றி பேசுவது சரியல்ல. " ரெலவன்ஸி " இல்லே.

Sri M. KALYANASUNDARAM : " ரெலவன்ஸி " **in the sense,**

கனம் அமைச்சர் அவர்கள் எங்கள் ஒத்துழைப்பைக் கோரினுர்கள். ஒதுக்கப்பட்ட பணத்தை சிக்கனமாக செலவழிப்பதற்காக சில யோசனேகளேச் சொல்லும் வகையிலே........

Mr. SPEAKER : —அது **far-fetched.**

Sri M. KALYANASUNDARAM : நான் இந்த விஷயத்தை முடித்துவிட்டேன். இந்த விஷயத்தை சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் இப்பொழுது இந்தக் கூட்டம் முடியும் தருவாயில் இருக்கிருேம். இது ஒரு முக்கியமான கூட்டமாக இருந்தது. பல பெரிய மசோதாக்கள், கல்வி, ஸ்தல ஸ்தாபனம், இவைகளேப்பற்றிய அறிக்கைகள், இன்னும்

[Sri M. Kalyanasundaram] 16th November 1957]

முக்கியமான சம்பவங்கள் ஆகியவைகளைப்பற்றி கடுமையான வாதப் பிரதி வாதங்கள் நடத்தி விவாதித்தோம். இப்பொழுது கூட்டம் முடிந்து அங் கத்தினர்கள் தங்கள் தங்கள் ஊர்களுக்கு எப்பொழுது திரும்புவோம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சூழ் நிலையில் இருக்கிறோம். எவ்வளவு உஷ்ணத்தைக் கொடுக்கக்கூடிய பிரச்னையாக இருந்தாலும், எதிர்க்கட்சி அங்கத்தினர்களும், ஆளும் கட்சி அங்கத்தினர்களும் ஒருவருக் கொருவர் மதிப்பு கொடுக்கக்கூடிய முறையிலே கண்யமாக நடந்து கொண்டு, சபையின் கண்யத்தை உயர்த்தியதற்கு தங்கள் மூலமாக நான் இந்தச் சபையின் அங்கத்தினர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்த சமயத்தில் நான் ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. பொதுவாக நிதி அமைச்சர் அவர்கள் சபை நடவடிக்கை களுக்கு பெரிய உதவியாக இருக்கிறார்கள். சென்ற சட்ட சபையில் அவர்கள் எல்லோரும் சந்தோஷப்படக்கூடிய ஒருவிஷயத்தைச்சொன்னார்கள். "சில சமயம் எதிர்க்கட்சிக்காரர்கள் என்னை கோபமூட்டி வேடிக்கை பார்க் கிறார்கள். அவர்களுக்கு இனிமேல் அதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்போவ தில்லை. என்னுடைய கோபத்தை குறைத்துக்கொள்ள முயற்சி செய்யப் போகிறேன்" என்று சொன்னார்கள். இந்தச் சபையிலும் அவருக்கு கோபம் அப்படியே இருக்கிறது. அதனால் அவர் கோபத்தைக் குறைத்துக் கொள்ளும் முயற்சியை கைவிட்டுவிட்டார்களா என்று எனக்கு சந்தேக மாயிருக்கிறது. அதற்காக கோபமே வரக்கூடாது என்று நான் சொல்ல வில்லை. எல்லோரும் உணர்ச்சி உடையவர்கள்தான். ரோஷம் இருக்கிறது. அதனால் சில சமயங்களில் கோபம் வரலாம். இருந்தாலும் இந்தச் சபையில் நம் அனைவருக்கும் அவர் வழிகாட்டக்கூடியவர். அரசியல் கருத்து வித்தியாசம் பல இருந்தாலும், நம் ராஜ்யத்தில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராய் இருந்தாலும் நல்ல அறிவாளியும் பொறுப்பு எற்றுக் கொள்ளக்கூடிய ஒரு சிலருக்குள் அவரும் ஒருவர். அப்படி இருக்கும் போது அவரிடமிருந்து எதிர்பார்க்க வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. இந்தச் சபை நல்ல முறையிலே.... (கனம் ஸ்ரீ ஸி. சுப்ர மணியம் : ஒரேயடியாக மேலே தூக்கி, பிறகு கீழே போடவேண்டாம்). மேலே தூக்கி நான் கீழே போடவில்லை. தூக்கின இடத்திலேயே வைக்கி றேன். கீழே போடவேண்டிய அவசியமில்லை. மனப்பூர்வமாக பேசு கிறேனே தவிர, அவர்களை உயர்த்துவதற்காகவோ அல்லது தாழ்த்துவதற் காகவோ பேசவில்லை. இன்னும் அடுத்து வரும் நிகழ்ச்சிகளில் பொறுப்பு அதிகமாக இருக்கக்கூடும். ஆகவே எப்பொழுதும் உணர்ச்சி வேகத்தை கட்டுப்படுத்துவது நல்லது. அம்மாதிரி அவ்வளவு மோசமாக அவர் இந் தக் கூட்டத்தில் கோபப்பட்டுவிட்டார் என்று நான் சொல்லுவதாக நினைக்க வேண்டாம். அவர் கோபத்தைக் குறைக்க எடுத்துக்கொண்ட முயற்சியை விடாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவருக்கும் என்னு டைய நன்றியறிதலை தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : I rise on a point of clarification from the hon. Member who just sat down.

நமது அமைச்சர் அவர்களைப் பாராட்டி திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னது மிகவும் சந்தோஷமாக இருந்தது. நிதி அமைச்சருக்கு கோபம் என்பது உண்டு, அதை அவர் குறைத்துக்கொள்வதாகச் சொன்னார், இனியும் தொடர்ந்து அந்த முயற்சியை செய்துவரவேண்டும் என்பதாகப் பேசினார்கள். அவர்கள் பழைய சம்பிரதாய முறைகளில் இருந்து மாறிவிட்டதாகச் சொல் கிறார்கள். உண்மையிலேயே பழைய சம்பிரதாயமான முறைகளில் இருந்து மாறிவிட்டார்களா ? இனி சாத்வீகத்திலேயே தான் நம்பிக்கை வைப்பது எனத் தீர்மானம் செய்துவிட்டார்களா ? அப்பேர்ப்பட்ட நல்லவர்களாக மாறி இருப்பார்களேயானால் பாக்கிப் பேர்களுக்கு உண்மையிலேயே கோபம் வருவதற்கு வாய்ப்பு இருக்காதே என்று கேட்க விரும்புகிறேன்.

16th November 1957]

MR. SPEAKER : தாங்கள் பேசுவது பொறுத்தமில்லாததாக இருக் கிறது. திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னதற்கு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

· **THE HON. SRI C. SUBRAMANIAM :** கனம் சபாநாயகர் அவர் களே, திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் போதித்த புத்திமதிகளுக்கு நான் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் என்னை விட ஒரு வயசு கூடுதல் உடையவர்தான். என்னைவிடச் சின்னவராக இருந் தாலும் புத்திமதி சொல்லக்கூடிய அநுபவம் உடையவர். யார் சொன் ஞலும் அந்த புத்திமதிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது தான் என் அபிப்பிராயம்.

SRI M. KALYANASUNDARAM : அதனுல்தான் தங்களுக்குச் சொன்னேன். யாரும் குறை இல்லாதவர்கள் என்று சொல்ல முடியாது. தங்களைக் குறையில்லாதவர்களாக யார் நினைத்துக் கொள்கிருரோ அவரை அறிவே இல்லாதவர் ஆகத்தான் கருதவேண்டும். கொஞ்சம் அறிவு இருக்கிறது என்பதனுல்தான் நாண் என்னுடைய குறைகளையும் உணர்கிறேன். அந்தக் குறைகளையும் போக்கிக்கொள்ள யார் எந்த புத்திமதி சொன்னுலும் அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராய் இருக்கிறேன். குறைகளை நாம் நீக்கிக்கொண்டால்தான் முன்னேற முடியும். நாடும் முன்னேற முடியும். ஒருவர் பேரில் ஒருவர் கோபித்துக்கொண்டு பயன் இல்லை.

அதுவும் முக்கியமாக இந்தச் சட்ட சபைக்கூட்டத்திலே காரசாரமான பல விவாதங்கள் வந்திருக்கின்றன. எந்த விஷயத்திலும், எந்தத் தனிப்பட்ட அங்கத்தினருடைய மனத்தையும் புண்படுத்த வேண்டும் என் பதாகப் பேசிய ஞாபகம் இல்லை. அப்படி யாராவது தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொண்டிருந்தாலும்கூட தயவு செய்து அவர்களைப் புண்படுத்திய தாக நினைத்துக்கொள்ளும் வார்த்தைகளை மறந்துவிடும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் எல்லோரும் ஒன்றுபட்டு நம்முடைய ராஜ்யத்தின் முன்னேற்றத் திற்காகப் பாடுபட இங்கு வந்திருக்கிருேம் என்ற எண்ணத்திலே மேன் மேலும் நம்முடைய முயற்சிகள் அதிகப் பயன்தரும் அளவிலே ஒன்றுபட வேண்டும். இந்தக் கூட்டத்தில் அநேக முக்கியமான விஷயங்களைத் தீர் மானம் செய்திருக்கிருேம். இந்தக் கூட்டம் சுமுகமாக இன்று முடி வடைகிறது. மீண்டும் சந்தோஷத்தோடு கூடவேண்டும் என்பதாக ஆசீர் வதித்து இந்தச் சபையை கனம் சபாநாயகர் அவர்கள் ஒத்திவைப்பார்கள் என்று நம்புகிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1957, be passed."

The motion was put and carried and the Bill was passed.

MR. SPEAKER : திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்ன விஷயத்தை நான் சொல்லவேண்டும் என்று இருந்தேன். கடந்த பல நாட்களாக இந்தச் சபை மிகவும் உயர்ந்த முறையில் பல காரியங்களைச் செய்திருக்கிறது. அநேகம் பிரச்னைகள் சமாதானமான முறையில் கோபம் வருவதற்குக் காரணம் இருந்தாலும், கோபம் ஜாஸ்தியாக வராமல் உயர்ந்த நிலையில் காரியங்களைச் செய்திருக்கிருர்கள். சந்தோஷமாக, சுமுக மாக காரியங்களை எல்லாம் நிறைவேற்றி இருக்கும் கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்தச் சபையை காலவரையின்றி (*sine die*) ஒத்திவைக்கிறேன்.

The House then adjourned *sine die*. (12·25 p.m.)

A 180—8